# அரசு ஊழியர்

ஜூலை 2021

மலர் : 42 இதழ் : 7

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு
ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு
மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன்,
இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்


### அமிழ்தனையது தமிழ்!

தமிழனே!
என் தோழனே!
உனக்கும் எனக்கும்
தாயால் வந்தது யாக்கை!
தமிழால் வந்தது வாழ்க்கை!

அமிழ்தம் அனையது தமிழ்;
அதில் நீ அமிழ்;
அமிழ்ந்து இமிழ்;
இமிழ்ந்து குமிழ்;

ஆங்கிலம் அளவு -
சோறுபோடாது தமிழ் - எனச்
சொல்வோர் முகட்டில் உமிழ்!

– கவிஞர் வாலி




# நாட்டு நடப்பும், நம்பிக்கை ஒளியும்!

*கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் இரண்டாவது அலை, மக்கள் மீது மிகப்பெரிய அளவில் துன்பத்தையும், துயரங்களையும், மரணங்களையும் அளித்துள்ள அதே சமயத்தில் மோடி அரசாங்கத்தாலும் மக்களின் துன்பங்கள் பல முனைகளிலும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் வேலையின்மைக் கொடுமையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். வருமானங்கள் குறைந்து, பசி-பட்டினிக் கொடுமைக்கு ஆளாகி இருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, அரசாங்கத்தின் மோசமான கொள்கைகளின் விளைவாக, பணவீக்கம் அதிகரித்து அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தின் விலைகளும் கடுமையாக உயர்ந்திருக்கின்றன.*

## வேலையின்மை இந்தியாவில் புதிய ஏழைகளை உருவாக்கியுள்ளது

*2021 ஏப்ரல், மே மாதங்களில் 2 கோடியே 20 லட்சம் பேர் தங்கள் வேலைகளை இழந்திருக் கிறார்கள். 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்திய நாட்டின் உழைக்கும் மக்கள் தொகையின் எண்ணிக்கை 49.5 கோடி ஆகும். 2020ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பை ஒன்றிய அரசு தள்ளி வைத்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் வெளியிட்டுள்ள தொழிலாளர் பங்களிப்பு விகிதம் (LPR) 39 கோடியே 8 லட்சம் ஆகும். மொத்த உழைக்கும் மக்கள் தொகையில் தொழிலாளர்களாக உள்ளவர்களை விட்டுவிட்டு கணக்கிடப்படுவது முழுமையான வேலை யின்மை விகிதமாகும். இதன்படி உழைக்கும் மக்கள் தொகையில் உள்ள 49 கோடியே 50 லட்சம் பேரில் தொழிலாளர் சந்தையில் பங்களிப்பை செலுத்தக்கூடிய 39 கோடியே 8 லட்சம் பேரை விட்டு விட்டால் 10 கோடியே 42 லட்சம் பேர் ஒட்டு மொத்த இந்தியாவில் வேலை இல்லாதவர்களாக மதிப்பிடலாம். இதன்படி*

வேலையின்மை விகிதத்தை கணக்கிட்டால் 23.2 சதவீதம் என்ற அளவில் இருக்கும். ஒன்றிய அரசு இதுகுறித்த அதிகாரப்பூர்வமான புள்ளிவிபரங்கள், தகவல்களை வெளிப்படையாக அறிவிப்ப தில்லை. இந்திய நாடு முழுவதும் வேலையில் லாமல் உள்ள கோடிக்கணக்கான இளைஞர்கள் மற்றும் உழைப்பாளர்களை கணக்கில் எடுத்து அவர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்கு வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மோடி அரசாங்கம் தயாராக இல்லை.

தற்போது சாமானியக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் நுகர்வுப் பொருள்களை வாங்குவது படுவீழ்ச்சி அடைந்திருக்கிறது. பசி-பட்டினிக் கொடுமைகள் அதிகரித்துக் கொண்டிருப்பதை, இலவச உணவு மையங் களுக்கு வெளியே பொருள்களை வாங்குவதற்காக மக்கள் நீண்ட நெடிய வரிசையில் நின்று கொண்டிருப்பதைப் பார்ப்பதிலிருந்து நன்கு தெரிந்துகொள்ள முடிகிறது. நாட்டில் இத்தகைய சூழ்நிலை இருந்துவரும் நிலையில்தான், ஒன்றிய அரசாங்கம் மக்கள் மீது மிகவும் கொடூரமான முறையில் விலைவாசி உயர்வைத் திணித்திருக் கிறது. பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்ப தற்கு அவர்கள் இரட்டிப்புச் சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. ஊரடங்கு காலத்தில் கூட ஏற்கனவே பணியாற்றியவர்களில் 47 சதவீதமான பெண்களுக்கு வேலை வாய்ப்பு மீண்டும் கிட்டவில்லை. நகர்ப்புற ஆண்களின் வேலை யின்மை விகிதத்தை விட நகர்ப்புற பெண்களின் வேலையின்மை விகிதம் மூன்று மடங்கு அதிகமாக உள்ளது.

முதலாளித்துவ சமூக அமைப்பில் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை 10 சதவீதம் இருக்கும்போதுதான் முதலாளிகளின் லாபம் கூடுதலாக இருக்கும் என்று சொல்கின்றனர். தற்சமயம் வேலைவாய்ப்பு சந்தையில் ஏற்பட் டுள்ள இதுவரை இல்லாத நெருக்கடி, புதிய வேலைவாய்ப்புகள் உருவாகாதது, உணவுப் பொருட்களின் விலை உயர்வு போன்றவற்றின் காரணமாக உழைப்பாளர்கள் கடும் துயரத்தை சந்தித்து வருகின்றனர். வறுமை குறித்த ஆய்வின் அடிப்படையில் 27% பேருக்கு முழுமையான வருமானம் இல்லை. ஒட்டுமொத்தமாக 63% பேருக்கு வருமானத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய சரிவால், இந்தியாவில் புதிய ஏழைகளின் எண்ணிக்கை வேகமாக உயர்த்தி வருகிறது.

## உற்பத்தித் துறையில் உண்டாகியுள்ள நெருக்கடிகள்

உற்பத்தித் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் வேலைவாய்ப்பு என்பது சரிபாதியாக குறைந்துள்ளது. கொரோனா தொற்று காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பாதிப்பில் இருந்து மீள்வதற்கு உறுதியான நடவடிக்கை களை மோடி அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மோடி அரசின் ஜிஎஸ்டி உள்ளிட்ட மோசமான கொள்கைகள் உற்பத்தித் துறையை எந்தளவுக்கு பாதித்துள்ளது என்பதற்கு ஆட்டோமொபைல் துறையின் சரிவே சான்று.ஆட்டோமொபைல் துறை இந்திய உள்நாட்டு உற்பத்தியில் மிக முக்கியமான தூணாக விளங்கியது. 2006-இல் இருந்து 2016 வரை உள்நாட்டு மொத்த உற்பத்திக்கும்,இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகன தயாரிப்புக்கும்,மூன்று கோடியே இருபது லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை அளிப்பதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்தது. அதற்குப் பிறகு, மோடி அரசாங்கம் கொண்டுவந்த ஜிஎஸ்டி எனும் தவறான வரி விதிப்பு கொள்கை மற்றும் காற்று மாசு கட்டுப்பாடு உள்ளிட்ட அம்சங்களால் கடுமையான நெருக்கடியால் சரியத் துவங்கியது. இத்துறையை பாதுகாப்பதற்கு மோடி அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இந்நிலையில் முதல் கொரோனா அலை இத்துறையில் ஒட்டுமொத்தமாக உற்பத்தியையும், விநியோகத்தையும் பாதித்தது. இத்துடன் ஆட்டோமொபைல் துறைக்கு தேவையான உதிரி பாகங்கள் தயாரிக்கக்கூடிய சிறு, குறு, நடுத்தரத் தொழில்களிலும் கடுமையான விளைவுகளை உருவாக்கியது. இந்த நெருக்கடிகள் வேலை வாய்ப்பிலும் 3.45 லட்சம் பேருக்கு இழப்பை ஏற்படுத்தியது. இந்தியாவில் விவசாயம், சுரங்கம், உற்பத்தித்துறை, ரியல் எஸ்டேட், கட்டுமானம், நிதித்துறை மற்றும் நிதி அல்லாத சேவைத்துறை, பொது நிர்வாகம் ஆகியவைதான் ஒட்டுமொத்த வேலைவாய்ப்பில் 99 சதவீதத்தை உருவாக்குவதாக CMIE ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தத் துறைகள் அனைத்தும் நெருக்கடியில் சிக்கியுள்ளன.

## உடைக்கப்படும் விவசாயத்தின் முதுகெலும்பு

இந்திய நாட்டின் விவசாயத்துறை 2019 - 20ஆம் ஆண்டை விட 2020 - 21ஆம் ஆண்டில் கூடுதலான

உற்பத்தியை நிகழ்த்தியுள்ளது. அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை, பருத்தி உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் உற்பத்தியும் கடந்த ஆண்டை விட அதிகரித்துள்ளது. உணவையும் வேலைவாய்ப்பையும் தருகிற விவசாயத்துறையை இந்திய நாட்டின் முதுகெலும்பு என குறிப்பிடுகிறோம். விவசாயத்துறையில் 2016 - 17ஆம் ஆண்டில் 14 கோடியே 56 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்து வந்தது. அதுவே 2020-21 ஆம் ஆண்டில் 15 கோடியே 18 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தந்துள்ளது. இதனால் கிராமப்புற மக்களுக்கு மட்டுமல்ல; ஒட்டு மொத்த இந்தியாவிற்கும் விவசாயத்துறை வேலைவாய்ப்பு பிரதானமானது. ஒட்டுமொத்த வேலைவாய்ப்பில் விவசாயத் துறையின் பங்களிப்பில் 36 சதம் என்பது தற்போது 40 சதமாக உயர்ந்துள்ளது. விவசாயத்துறை பொருளாதார வளர்ச்சிக்கும் வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு என விரிவான முறையில் பங்களிப்பை செலுத்தியுள்ளது. ஆனால் மோடி அரசாங்கம் விவசாயத்தை கார்ப்பரேட்டுகளுக்கு தாரைவார்க்க கூடிய முறையில் இந்தப் பேரிடர் காலத்திலும் மிக மோசமான வேளாண் திருத்தச் சட்டங்களை நிறைவேற்றியது. ஏற்கனவே ஆசியாவின் முதல் இரண்டு பணக்காரர்களாக அம்பானியும் அதானியும் வந்திருக்கக்கூடிய நேரத்தில் இன்னும் உலகப் பணக்காரர்கள் பட்டியலில் உயர்வதற்கு வேளாண் சட்டங்களும் உதவும் என்பதில் ஐயமில்லை.நிலம், உணவு உற்பத்தி, உணவுச் சந்தை ஆகியவற்றை கார்ப்பரேட்டுகளுக்கு அளிப்பதற்கு உதவிடும். இந்த சூழ்ச்சியை உணர்ந்தே விவசாயிகளின் போராட்டம் 200 நாட்களைக் கடந்தும் எழுச்சியுடன் நடைபெற்று வருகிறது.

சேவைத்துறையில் சில ஆண்டுகளாக ஏற்பட்டிருந்த சிறிய முன்னேற்றமும் தற்சமயம் பேரிடர் காலத்தில் சரிவை சந்தித்துள்ளன. இத்துறையில் தினக்கூலி மற்றும் சிறு விற்பனையாளர்கள் 2 லட்சம் பேர் வேலை வாய்ப்பை கடந்த ஏப்ரல் மாதத்தில் இழந் துள்ளனர்.எனவே, இந்திய நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்திச் சரிவு, உணவுப் பொருள் பண வீக்கம் மற்றும் கடும் பொருளாதார வீழ்ச்சி ஆகியவற்றிலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டிய நேரத்தில் பிரதமர் மோடி கண்களில் உள்ள கிளிசரின் கண்ணீரை துடைத்துவிட்டு செயல்பட வேண்டிய தருணமிது.

## பெட்ரோல், டீசல், எரிவாயு, கண்ணீர்

பணவீக்கத்திற்குப் பிரதான காரணம் நாளும் உயரும் பெட்ரோல், டீசல் விலை உயர்வுகளேயாகும். மே 4க்குப்பின், இவற்றின் விலைகள் 24 தடவை உயர்ந்திருக்கின்றன இப்போது பெட்ரோலின் விலை லிட்டர் 100 ரூபாய் அல்லது அதற்கும் அதிகமான விலைக்கு விற்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன ஒன்றிய அரசு பெட்ரோலியப் பொருட்களின் மீது கலால் வரி மற்றும் இதர வரிகள் மூலமாக மிகப்பெரிய அளவில் சுமைகளை ஏற்படுத்தி இருப்பதால் பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலை 55 முதல் 58 சதவீதம் அளவிற்கு ஏற்றப்பட்டிருக்கின்றன. இதன் விளைவாக, 2014-15-லிருந்து அரசாங்கத்திற்கு பெட்ரோலியப் பொருட்களின் மூலமாக வருவாயில் 138 சதவீதம் அளவிற்கு உயர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பெட்ரோல்-டீசல் விலைகள் உயர்வது, இவற்றின் விளைவாகப் போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்வதால் அனைத்து அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும், பல்வேறு வேளாண் இடுபொருட்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. அரிசி, சமையல் எண்ணெய்கள், பருப்பு வகைகள், காய்கறிகள், முட்டைகள் போன்ற உணவுப் பொருள்களின் விலைகளும் விண்ணை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. சமையல் எண்ணெய் மிகவும் மோசமான விதத்தில் 60 சதவீத உயர்வினை எட்டியிருக்கிறது. பம்பு செட்டுகள் மற்றும் டிராக்டர்களுக்குப் பயன்படுத்தப்படும் டீசலின் விலை உயர்வு காரணமாக விவசாயிகள் கடுமையானத் தாக்குதலுக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

பெட்ரோலியம்- இயற்கை வாயுத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், சமீபத்தில், எரிவாயு மீது ஏற்றப்பட்டுள்ள வரிகளைக் குறைக்க முடியாது என்றும், ஏனெனில் இவ்வாறு வசூலித்திடும் பணம் நலத் திட்டங்களுக்கும், தடுப்பூசித் திட்டத்திற்கும் தேவைப்படுகிறது என்றும் கூறியிருக்கிறார். ஆனால், இதே அரசாங்கம்தான், கார்ப்பரேட் வரிகளை வெட்டிக் குறைத்திருப்பதன் மூலம் சுமார் 1.45 லட்சம் கோடி ரூபாய் வருவாயை இழந்திருக்கிறது. இதன்றி கார்ப்பரேட்டு களுக்கு இதர பல சலுகைகளையும் விலக்குகளையும் அளித்திருக்கிறது.

சமையல் எரிவாயுவிற்கு அளித்துவந்த மானியம் வெட்டப்பட்டுவிட்டதன் காரணமாக, அதன் விலைகளும் செங்குத்தாக உயர்ந்திருக்கின்றன. 2019-20இல் சமையல் எரிவாயுவிற்கு அளித்து வந்த நேரடி ரொக்க மானியம் 22,635 கோடி ரூபாயாக இருந்தது, 2021 பிப்ரவரியிலும் 3,559 கோடி ரூபாயாகக் குறைந்துவிட்டது. இதன் விளைவாக, இதன் ஒட்டுமொத்த சுமையும் நுகர்வோர் மீது ஏற்றப்பட்டிருக்கிறது. விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதில் மோடி அரசாங்கத்தின் தோல்வி அப்பட்டமாகத் தெரிகிறது. அது ஏற்கனவே அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தை, அதில் சமையல் எண்ணெய்கள் உட்பட பல முக்கியமான அத்தியாவசியப் பொருள்கள் மீதிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கியதன் மூலம், நீர்த்துப் போகச் செய்துவிட்டது. இதன் காரணமாக பெரும் வர்த்தகர்கள் சமையல் எண்ணெய்களைப் பதுக்கிவைத்து, கொள்ளை லாபம் ஈட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மூன்று வேளாண் சட்டங்களுடன் அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தில் திருத்தங்கள் செய்ததன் மூலம் அரசாங்கம் தன் மக்கள் விரோத குணத்தையும் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது.

பெட்ரோலியப் பொருட்களின் மீதான கலால் வரிகள் மற்றும் செஸ்கள் ஆகியவற்றைக் குறைப்பதன் மூலம் ஏற்படும் வருவாய் இழப்புகளை, 2019க்கு முன்பிருந்த நிலைக்கு கார்ப்பரேட் வரிகளை மீண்டும் விதிப்பதன் மூலம் சரிசெய்துகொள்ள முடியும். மேலும் பெரும் பணக்காரர்கள் மீது செல்வ வரி (wealth tax) விதிப்பதன் மூலம் போதிய வருவாயை ஈட்டிட முடியும். ஆனாலும், ஒன்றிய மோடி அரசாங்கம் கார்ப்பரேட்டுகளையும் பெரும் பணக்காரர் களையும் குஷிப்படுத்தவே விரும்புவதால், அவர்கள் மீது எவ்விதமான வரியும் விதிக்காமல் உள்ளது. மாறாக சாமானிய மக்கள் மீது மட்டும் இப்போதுள்ள இக்கட்டான காலத்திலும் கூட கசக்கிப் பிழிந்து வருவாயை ஈட்டிடவே நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

சமையல் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.25.50 அதிகரித்துள்ளது. அதேபோல 19 கிலோ கொண்ட வர்த்தக சிலிண்டர் விலை ரூ.76 அளவிற்கு அதிகரித்துள்ளது. கடந்த ஏழு மாத காலத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர்விலை சுமார் 250 ரூபாய் அதிகரித்துள்ளது. 594 ரூபாயாக இருந்தது, இன்றைக்கு 850 ரூபாயைத் தாண்டியுள்ளது. ஏழை-எளிய நடுத்தர மக்களின் வாழ்வாதாரங்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை நடத்துவதில் மோடி அரசு எந்தவிதமான எல்லையும் இல்லாமல் சென்றுகொண்டிருக்கின்றது. இது எந்தவிதத்திலும் ஏற்க முடியாது. உடனடியாக சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும்.

விலைவாசிகளை உயர்த்துவதன் மூலம் சாமானிய மக்களின் மீது தாங்கமுடியாத அளவிற்கு சுமைகளை ஏற்றியிருப்பதைச் சகித்துக்கொள்ள முடியாது. அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தைப் பயன்படுத்துவதன் மூலம் விலைவாசிகளை கட்டுப்படுத்துவதை உத்தரவாதப்படுத்த வேண்டும். காய்கறி எண்ணெய்களின் ஊக வர்த்தகத்திற்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். வருமானவரி செலுத்தாத குடும்பத்தினரில் தனிநபர் ஒவ்வொருவருக்கும் இலவச உணவு தானியங்கள் 10 கிலோ அளித்திட வேண்டும், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய்கள், சர்க்கரை, தேயிலை ஆகியவற்றுடன் கூடிய உணவுப் பொருள் தொகுப்பை இலவசமாக அளித்திட வேண்டும் ஆறு மாத காலத்திற்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 7,500 ரூபாய் அளித்திட வேண்டும். அனைவருக்கும் தடுப்பூசி செலுத்துவது, இலவச உணவுத் தொகுப்பு அளிப்பது, வேலை உறுதித் திட்டத்தை விரிவாக்குவது, பெட்ரோலியப் பொருட்களின் மீதான வரிகளை வெட்டுவது உட்பட விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்திடவும் உடனடி நடவடிக்கை எடுக்க ஒன்றிய அரசு முன்வர வேண்டும்.

## எடப்பாடி அரசின் மோசமான நிர்வாகத்தை அம்பலப்படுத்திய சி.ஏ.ஜி. அறிக்கை

மக்களுக்கு சிறந்த ஆட்சியை கொடுப்பது ஒன்றிய, மாநில அரசுகளின் கடமை. சிறந்த ஆட்சிக்கு தகுந்த கொள்கை முடிவுகளை உருவாக்குவது மிக மிக அவசியம். அத்தகைய அரசின், நோக்கங்கள் எந்த அளவுக்கு சிக்கனமானதாகவும், சிறந்த முறையிலும், பயனுள்ளதாகவும் நிறைவேறியது என்பதை தணிக்கை செய்யும் இந்திய கணக்காய்வு மற்றும்

தணிக்கைத் துறை தலைவர் (சிஏஜி) ஆய்வுகளை மாநில சட்டமன்றத்தின் பார்வைக்கு கொண்டு செல்வது வழக்கம்.ஆட்சியின் இறுதிக் காலத்தில் இப்படி ஒரு நடைமுறை இருப்பதையே வசதியாக மறைத்துக் கொண்டது அதிமுக. ஆனால், அதிமுக விட்டுச்சென்ற அறிக்கைகளை புதிய அரசு, முதல் கூட்டத் தொடரிலேயே சமர்ப்பித்தது. “எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம்” என்று அடிக்கப்பட்ட கொள்ளைகளை ‘வெளிச்சம்’ போட்டுக் காட்டியுள்ளது சிஏஜி அறிக்கை.

டி.ஜெயக்குமார் மீன்வளத் துறைக்கு அமைச்சராக இருந்தும், அந்த மக்களின் மேம்பாட்டுக்காக பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட 186.90 கோடி ரூபாயை முழுமையாக பயன்படுத்தவில்லை என இடித்துரைத்துள்ளது. மீனவர்களின் சமூக பொருளாதாரம், முன்னேற்றம், நிலையான மேம்பாட்டிற்கான முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்தவில்லை என்பதோடு, ஒன்றிய நிதியை பாஜக அரசிடம் கேட்டுப் பெறாமல், மாநில நிதி ரூ.130 கோடியை பயன்படுத்தியது அதிமுக அரசின் ‘விவேகமற்ற’ நிதி மேலாண்மைக்கு சான்றாக அமைந்திருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

பூம்புகார் மீன்பிடித் துறைமுகத்தில் பகுதியளவு கட்டப்பட்ட மதகு அணையின் சுவர் கட்டுமானப்பணிளை முடிப்பதில் ஏற்பட்ட தாமதம், குமரி மாவட்டம் தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுக பணிகளை வேறு இடத்துக்கு மாற்றியதால் ஏற்பட்ட கூடுதல் செலவினம், இந்த இரண்டு மீன்பிடி தளங்களில் உருவாக்கப்பட்ட கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்த முடியாமல் போனது, அனுமதியில்லாமல் மீனவர் குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்ததால் பயன்பாடு இல்லாமல் போனது ஆகியவற்றாலும் 345 கோடி ரூபாய் நிதியை முடக்கவும் ஜெயக்குமார் வழி வகுத்துள்ளார் என்றும் அடுக்கடுக்காக குற்றச்சாட்டை அடுக்கியிருக்கிறது.

8 நதிகளை இணைக்கும் திட்டத்தை 2008 ஆம் ஆண்டில் கண்டறிந்த திமுக அரசு, தாமிரபரணி ஆற்றின் மிகை வெள்ள நீரை பயன்படுத்த கருமேனியாறு-நம்பியாறு நதிகளுடன் இணைக்கும் திட்டம் கொண்டு வந்து 23,040 ஹெக்டர் விவசாய நிலங்கள் பாசனம்,நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த முடிவு செய்தது. அதேபோல், காவிரி-அக்னியாறு-தெற்கு வெள்ளாறு-மணிமுத்தாறு-வைகை-குண்டாறு இணைப்பு திட்டத்தையும் அறிவித்தது.அதன் பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட, இந்த திட்டத்திற்காக அதிமுக அரசு ஒப்புதல் கொடுத்த ரூ.797.78 கோடியில் 694 கோடி வரைக்கும் செலவு செய்து ஏழு ஆண்டுகள் கடந்தும் ஆரம்பக் கட்டத்தை கூட தாண்டாமல் செலவை 48 சதவீதம் அதிகரித்தது தான் மிச்சம்.

இதேபோல், காவிரியின் குறுக்கே தடுப்பணை, வைகை-குண்டாறு இணைப்பு பணிக்காக ரூ.2,673 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்த அதிமுக அரசு, நிதி உதவி பெறுவதற்கான ஒப்பந்தங்கள் எதுவும் இல்லாமல் அவசரகோலத்தில் வேலையைத் துவக்கி ரூ.249 கோடியை தடுப்பணைக்காக மட்டுமே செலவிட்டது. திட்டம் தொடங்கப்பட்டு பத்து ஆண்டுகளை கடந்தும் இணைப்புக் கால்வாய்கூட வெட்ட முடியாத ‘அலங்கோல’காட்சிகளை புகைப்படங்களுடன் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது சிஏஜி.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க ரூ.10,300 கோடியில் மாநில முழுவதும் 1,150 ஏக்கர் நிலப்பரப்பில் உள் கட்டமைப்புகளை மேம்படுத்த கொண்டுவரப்பட்ட “தமிழ்நாடு தொலை நோக்குப் பார்வை 2023” திட்டத்தின் நோக்கத்தையும் துறையின் அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் சிதைத்துவிட்டார்.

அரசுக்கு சொந்தமான வேளாண்மை தேயிலைத் தோட்டங்களை டாடா தேயிலை நிறுவனம், ஜெயஸ்ரீ இண்டஸ்ட்ரீஸ், ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட், பெரிய கருமலை டீ மற்றும் ப்ராட்யூஸ் கம்பெனி லிமிடெட் ஆகிய தனியார் நிறுவனங்கள் ஏக்கர் ஒன்றுக்கு மிகக் குறைந்த அளவாக ரூ.330 லிருந்து 750 வரை ஒரு ஆண்டுக்கு குத்தகை எடுத்திருக்கிறது.3 ஆண்டுகளுக்கு ஒருமுறை சந்தை மதிப்புக்கு ஏற்றவாறு குத்தகை வாடகையை உயர்த்த வேண்டும், குத்தகையைப் புதுப்பிக்க வேண்டும் என்பது அரசின் வழிகாட்டுதல். ஆனாலும், 10 ஆண்டு காலமாக தொடர்ந்து ஆட்சி செய்த அதிமுகவின் ‘ஆசி’யால் புதுப்பிக்காமல் அரசுநிலங்கள் இந்த தனியார் வசமே உள்ளதால் சுமார் 2 கோடி ரூபாய் வரைக்கும் குத்தகையும் குறைவாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்ஒன்றிய அரசின் சுற்றுச் சூழல் வனத்துறை அமைச்சகத்தின் உத்தரவுகளை புறம்தள்ளி சுற்றுச்சூழல் அனுமதி இல்லாமல் சுண்ணாம்புக்கல் சுரங்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. ரூ.57.72 கோடி அபராத தொகை கட்டியுள்ளது .மேலும்,2.77 கோடி ரூபாய் கட்ட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.இதேபோல், சுற்றுச் சூழல் முன் அனுமதி இல்லாமல் மேற்கொண்ட நடவடிக்கைகளை தொடர்ந்ததால் ரூ.14.12 கோடி அபராதம் கட்டியிருக்கிறது கனிம நிறுவனம். கடந்த பத்தாண்டுகால அதிமுக ஆட்சியின் நிர்வாகத் திறமையால் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் உள்ளிட்ட 70 பொதுத்துறை நிறுவனங்கள் 2018 -19ஆம்ஆண்டில், 3,789.54 கோடி ரூபாய் இழப்பை சந்தித்துள்ளன.

மாநிலத்தின் வருவாய் பற்றாக்குறையை நீக்கவும் நிதி பற்றாக்குறையை கட்டுப்படுத்தும் கடன் சுமைகளை திறம்பட சமாளிக்கவும் "தமிழ்நாடு நிதி நிலை பொறுப்புடைமை சட்டம் 2003" கொண்டுவரப்பட்டது. இது கடைசியாக 2017ல் கடந்த கால ஆட்சியாளர்களால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனாலும், கடந்த 2014-15 ஆம் ஆண்டுகளில் ரூ.6,408 கோடியாக இருந்த வருவாய் பற்றாக்குறை உயர்ந்துகொண்டே வந்து 2018-19ஆம் ஆண்டுகளில் 23,459 கோடியாக உயர்ந்து விட்டது. நான்கு நிதி ஆண்டுகளில் 17 ஆயிரம் கோடியாக பற்றாக்குறையை அதிகரித்ததும் ஏழரைக் கோடி தமிழக மக்களின் தலையில் தலா 35 ஆயிரம் ரூபாயை சுமத்தி கடனாளிகளாக மாற்றியதும்தான் அதிமுக அரசின் சாதனை! என்பதையும் தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

2016 -17ஆம் நிதி ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு, அரசாணையை விட கூடுதலாக ரூ. 21.85 கோடியை பாடநூல் கழகம் பெற்றதால் அது அரசுக்கு இழப்பாகும்.அதேபோல், 2006-11 ஐந்தாண்டு காலம் திமுக ஆட்சியின்போது, பாடப் புத்தகங்களின் முன்னுரை, முகவுரையில் முதல்வர் கருணாநிதி, அப்போது அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு ஆகியோருக்கு நன்றி கூறி எழுதப்பட்டிருந்தது.பின்னர் ஆட்சிக்கு வந்த அதிமுகவிடம், 1 முதல் 8 உள் பக்கங்களில் 'கருத்தியல் பிழைகள்' இருப்பதாகவும் அதை உடனடியாக நீக்க வேண்டும் என்று கூறி அந்த புத்தகங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன. முன்னுரை, முகவுரை மாற்றத்துக்காக 6.37 லட்சம் பிரதிகள் மீண்டும் அச்சடிக்கப்பட்டன. இந்த வகையான தேவையற்ற செலவுக்கு, 23.27 கோடி ரூபாய் வீணானது. புத்தகத்தின் அம்சங்களை சரிவர செய்யாதது பள்ளிக்கல்வி துறையின் தவறு என்றும் பள்ளிக் கல்வி துறையின் பல்வேறு பிரிவு அதிகாரிகளின் அலட்சியமான நடவடிக்கை களால், அரசுக்கு ரூ. 53 கோடி ரூபாய் வீண் செலவாகியுள்ளது என்றும் தணிக்கை துறைத் தலைவர் அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது.

தொடர்ந்து 2 முறை வெற்றி பெற்ற ஒரே கட்சி என்று பெருமைக் கொள்ளும் அதிமுக ஆட்சியில் சமூக பொருளாதாரம், பொது சமூகப் பிரிவு, பொதுத்துறை நிறுவனங்கள், நிதி-நிலை மீதான சிஏஜி அறிக்கை விலாவாரியாக சுட்டிக்காட்டி இருக்கும் வருவாய் இழப்பு, முறைகேடு, திட்டங்கள் அறிவித்தும் நிறைவேற்ற கவனம் செலுத்தத் தவறியது, கால விரயம் உள்ளிட்ட வற்றைப் பற்றி அமைச்சர்கள் யாரும் கவலைப் படவில்லை என்பதையும் கண்மூடித்தனமாக மக்கள் வரிப் பணத்தை வீணடித்துள்ளனர் என்பதும் தெரிகிறது..

## இருளில் இருந்து வெளிச்சத்திற்கு...

மோடி மற்றும் எடப்பாடி ஆகியோரின் மலினமான நிர்வாகத்தின் காரணமாக இன்று இந்திய மற்றும் தமிழக மக்கள் கடுமையான துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர். புதிதாக பதவி ஏற்றுள்ள தமிழக அரசு, கரோனா மற்றும் அதற்கு பிந்தைய தாக்கங்களில் இருந்து மக்களை விடுவிக்க முயற்சிகள் மேற்கொண்டு ஆக்க பூர்வமான செயல்களை செய்து வருகிறது.. பிற பணிகளை ஒதுக்கி வைத்திருந்த தமிழக முதல்வர் தற்போது தேர்தல் அறிக்கையில் கூறியிருந்த உறுதிமொழிகளை நிறைவேற்ற ஆரம்பித்துள் ளார். அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான புதிய ஓய்வூதிய திட்டத்தை திரும்பப் பெறுதல் மற்றுமுள்ள இதர உறுதிமொழிகளை நாம் வலியுறுத்திப் பெற வேண்டிய தருணம் வந்துள்ளது. அதற்கான முனைப்பான பணிகளில் அரசு ஊழியர் சங்கம் தன்னை முழு மூச்சில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. கூடிய விரைவில் நம்முடைய நீண்டநாள் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பயணிப் போம்!

■

# போராட்டங்கள் என்றும் தோற்றதில்லை மக்களுக்கு கிடைத்த மகத்தான வெற்றி!

**கொ**ரோனா கொடுந்தொற்றின் இரண்டாவது அலை மிக வேகமாக பரவிவரும் சூழ்நிலையில் இந்தியாவில் கடுமையான பாதிப்பு உள்ளாகி இருக்கின்றது. தமிழகத்தில் அது மிகக் கடுமையாக பரவிக் கொண்டிருக்கிறது. மருத்துவ அவசர நிலை என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமை மிக மோசமாக இருந்தது. மருத்துவ மனைகளில் ஆக்ஸிஜன் கிடைக்காமல் பலர் உயிரிழக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. மருந்துக்காக மக்கள் பரிதவிக்கும் நிலை உருவாகியிருந்தது.

இந்த இரண்டாவது அலையில் நம்முடைய வாழ்நாளில் நாம் சந்தித்திராத ஒரு சூழலை தற்போது சந்தித்துக் கொண்டு இருக்கின்றோம். தினமும் காலையில் வாட்ஸ்அப் திறந்தால் அஞ்சலி செய்தி, சிறப்பு செய்தி நம்முடைய உறவினர்கள், நமது நண்பர்கள், நமது சங்கத் தோழர்கள், முன்னாள் நிர்வாகிகள், நம்முடைய குடும்ப உறுப்பினர்கள் என்று தினம் தினமும் இறக்கும் செய்தி, மக்கள் கொத்து கொத்தாக இறக்கும் செய்தி தொலைக்காட்சியில் காணும் போது கல் நெஞ்சம் கூட கரையும் நிலையில் பல்வேறு நமது தோழர்கள், இந்த காலகட்டத்தில் இழந்திருக்கிறோம். இந்நிகழ்வுகள் மறக்க முடியாத சம்பவங்களாக நமது தோழர்களின் நினைவில் நீங்கா இடம் பெற்றிருக்கிறது.

கொரோனாவின் முதல் அலையின்போது இங்கிலாந்து, இத்தாலி, அமெரிக்கா போன்ற நாடுகளில் மக்கள் உயிரிழப்புகள் அதிகம். அதைப் பார்த்து நாம் கவலைப்பட்டோம். ஆனால் இரண்டாவது அலையில் இந்தியாவைப் பார்த்து உலக நாடுகள் பரிதாபப்பட்டார்கள். அது மட்டும் அல்ல உலகிலேயே கொரோனாவின் தாக்கம் மிக அதிகமாக உள்ள நாடாக இந்தியா விளங்கிக் கொண்டிருக்கிறது.

முதல் அலையின் தாக்கத்தை உணர்ந்த உலக நாடுகள் இடைப்பட்ட காலத்தில் மக்களை பாதுகாப்பதற்கு தடுப்பு மருந்து ஆராய்ச்சியில் இறங்கி அந்நாட்டு மக்களுக்கு 90% பேருக்கு தடுப்பூசி செலுத்தி விட்டனர். நம் நாட்டில் 3.2% மக்கள் தொகைக்குத்தான் தடுப்பூசி போடப் பட்டுள்ளது.

இந்த விசயத்தில் ஒன்றிய அரசு ஜவடேகர், ஆகஸ்ட் மாதம் தொடங்கி டிசம்பர் மாதத்திற்குள் 108 கோடி மக்களுக்கு அதாவது 216 கோடி டோஸ்கள் தயாரித்து தடுப்பூசியை அனைவருக்கும் செலுத்தி விடுவோம் என்று அறிவித்தார். ஒன்றிய அரசின் சுகாதார அமைச்சர் ஹர்ஷவர்தன் அறிவித்திருப்பதை மேற்கோள் காட்டி இந்த அறிவிப்பை ஜவடேகர் வெளியிட்டுள்ளார். சுகாதார அமைச்சர் வரும் டிசம்பர் மாதத்திற்குள் வயது வந்தவர்களுக்கு மட்டும் தடுப்பூசி போட்டு முடிக்கலாம் என்று கேள்விக்குறியாகத்தான் தன்னுடைய திட்டத்தை அறிவித்தார்.

இவ்வாறு இருக்க பத்திரிகையில் வெளிவந்த செய்தி மோடி அரசாங்கம் தடுப்பூசிக் கொள்கை யின் மீது உச்சநீதிமன்றத்தின் கடும் விமர்சனம், மாநில அரசாங்கங்களிடமிருந்து வந்த கடும் எதிர்ப்பு மற்றும் நிர்ப்பந்தங்கள் காரணமாக தன்னுடைய நிலை மாற்றி தாராளமயமாக்கப் பட்ட தடுப்பூசி கொள்கையை விலக்கிக்கொள்ள நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறது. அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி செலுத்த வேண்டும் என்கிற கோரிக்கையை ஏற்கச் செய்யப்பட்டிருக்கிறது.

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைவருக் கும் இலவசமாக தடுப்பூசி செலுத்த மத்திய அரசே மாநிலங்களுக்கு தடுப்பூசி வழங்கும் என பிரதமர் மோடி அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. தடுப்பூசி கண்டறியப்பட்ட உடனேயே இந்த முடிவை மோடி அரசு எடுத்திருக்க வேண்டும். மாறாக தடுப்பூசி விவகாரத்தில் பல்வேறு குளறுபடிகளையும், குழப்பங்களையும் ஒன்றிய அரசு செய்தது. இதற்கு இடதுசாரி கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு எதிர்க்கட்சிகளும், இந்திய மக்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

தடுப்பூசி போடுவது மாநிலங்களின் பொறுப்பு என்று கைகழுவி விடுவதிலேயே ஒன்றிய அரசு குறியாக இருந்தது. இந்நிலையில் கேரள முதல்வர் பினராயி விஜயன், பல்வேறு எதிர்க்கட்சிகள், மாநில முதல்வர்



களுக்கும் கடிதம் எழுதினார். ஒன்றிய அரசு இலவச தடுப்பூசிக்கு பொறுப்பேற்க வேண்டுமென மாநிலங்கள் வலியுறுத்த வேண்டும் என்றார்.


இந்தப் பின்னணியில்தான் நாட்டு மக்களுக்கு ஊடகங்கள் மூலம் உரையாற்றிய பிரதமர் மோடி அவர்கள், பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் இலவச தடுப்பூசி வழங்கு வதற்கான மருந்தை கொள்முதல் செய்து மத்திய



அரசு மாநிலங்களுக்கு வழங்கும் என்று கூறியுள்ளார். அதே நேரம் மொத்த உற்பத்தியில் 75% ஒன்றிய அரசு கொள்முதல் செய்து வழங்கும் என்றும், 25% தனியாருக்கு வழங்கப்படும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

அனைவருக்கும் இலவச தடுப்பூசி என்பதை உறுதி செய்தால் தனியாருக்கு விற்பனை செய்ய வேண்டிய தேவை இல்லை. இருந்தாலும் கார்ப்பரேட் மருத்துவமனைகளின் லாபத்திற் காகவே பிரதமர் இந்த சலுகையை வழங்கி யுள்ளார்.

தடுப்பூசிக்கு மூன்று வகையான விலையை தீர்மானித்து மருந்து உற்பத்தி நிறுவனங்கள் அறிவித்ததை இந்த அணுகுமுறையை **உச்ச நீதிமன்றம் கடுமையாக விமர்சித்ததோடு,**



**மத்திய அரசு ஏன் தலையிடவில்லை என்று கேள்வி எழுப்பியது. இத்தகைய அழுத்தங் களின் காரணமாகவே ஒன்றிய அரசு வேறு வழியின்றி மக்கள் கருத்துக்கு அடிபணிந் துள்ளது.**

பிரதமர் தன்னுடைய உரையில் “சுகாதாரத்துறை மாநில அரசு களின் பொறுப்பில்தான் உள்ளது” என்று பலமுறை குறிப்பிட்டுள்ளார். பொதுவான வழிகாட்டு நெறிமுறைகளை ஒன்றிய அரசு வகுக்கலாம். ஆனால் ஒவ்வொன்றுக்கும் ஒன்றிய அரசை எதிர்பார்த்திருப்பது தேவையற்ற தாமதத்தையும் குழப்பத்தையுமே ஏற்படுத்தியது.

தமிழக முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து தரப்பு மக்களுக்கும் தடுப்பூசி போட பதிவு செய்து சான்றிதழ் அளிப்பது போன்றவற்றை மாநிலங்களுக்கு வழங்க




வேண்டும் என்று கோரியிருப்பது முற்றிலும் நியாயமானது.

கொரோனாவின் கோரப்பிடியிலிருந்து மக்களை விடுவிக்க தடுப்பூசி பெரும் உதவியாக இருக்கும். அனைத்து மாநிலங்களும் பாரபட்சமின்றி தடுப்பூசி வழங்குவதோடு போர்க்கால அடிப்படையில் அனைத்து வயதினருக்கும் தடுப்பூசி செலுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

கோவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலையின் வீச்சு படிப்படியாக குறையத் தொடங்கியுள்ள போதிலும் அது பல லட்சக்கணக்கான குடும்பங்களின் மீது ஏற்படுத்திய பேரழிவு ஒட்டுமொத்த நாட்டின் கவனத்தையும் கவ்விப்பிடித்து கொண்டிருக்கிறது. கோவிட் 19யை எதிர்கொள்வதற்கு எவ்வித தயாரிப்புகளிலும் ஈடுபடாது இருந்த ஒன்றிய அரசு மக்கள் மத்தியில் மிகப்பெரிய கோபத்தை

ஏற்படுத்தியுள்ளது. மோடி அரசாங்கம் இதை கையாண்டவிதமும் அதன் அறிவியலற்ற அணுகுமுறையும் மக்களுக்குப் பேரழிவை ஏற்படுத்தி இருக்கிறது.




கோவிட் 19 இரண்டாவது அலையினால் மிகப்பெரும் ஆபத்து உருவாகிக் கொண்டிருக்கிறது. பல லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்திருக்கிறார்கள். வேலைகளை இழந்திருக்கிறார்கள். வர்த்தகர்கள், கடை வைத்திருப்போர் வாழ்க்கை நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது. பல குடும்பங்கள் கடன் வலைக்குள் தள்ளப்பட்டு பசி பட்டினி கொடுமை அதிகரித்திருக்கிறது.

தேசிய புள்ளி விவரம் அமைப்பு 2021க்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி விபரங்களை அறிவித்திருக்கிறது. இது கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத மிகவும் மோசமாக அளவில் 7.3% அளவிற்கு சுருங்கி இருப்பதாக காட்டுகிறது.

இந்த கொரோனா காலத்தில் பல்வேறு பொருளாதார நிபுணர்கள் குறிப்பாக இந்தியத் தொழில்களின் மகா சம்மேளனத்தின் தலைவர் உதய்கோடக் மக்களுக்கு நேரடியாக நிதி அளிப்பது உட்பட பெரிய அளவில் பொருளாதார ஊக்குவிப்புகள் செய்யப்பட வேண்டும் என்று கோரியிருக்கிறார். இன்னும் ஒரு பொருளாதார நிபுணர் கடன் வாங்கியோ, ரூபாய் நோட்டுகள் அச்சடித்தோ அதிக அளவில் செலவு செய்திட வேண்டும் என்றார்கள். இதை எதையும் ஒன்றிய அரசு காதில் போட்டுக் கொள்ளவில்லை. உணவு மானியத்திற்கோ பெரிய அளவில் ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை.

இவை எல்லாவற்றையும்விட மிகவும் மோசமாக பளிச்சௌனத் தெரிவது சுகாதார பட்ஜெட்டிற்கென பெரிதாக ஒன்றும் ஒதுக்காதது ஆகும். சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்திற்கான செலவினம் என்பது சென்ற ஆண்டைவிட 11% அளவிற்குத்தான் உயர்வு இருந்திருக்கிறது.

ஒன்றிய அரசு ஏழை மக்களுக்கு தேவைப்படுவோருக்கும் நேரடியாக நிதி அளிக்க பிடிவாதமாக மறுத்து வருகிறது. சென்ற ஆண்டு வருமான வரி செலுத்தாத குடும்பத்தினருக்கு ரூ.7500 அளித்திட வேண்டும் என இடதுசாரி கட்சிகள், எதிர்க்கட்சிகள் கோரிவந்தது. ஆனால் அரசாங்கம் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை.

நவீன தாராளமயக் கொள்கைகளுக்கு சொந்தக்காரர்களான கிரேட் பிரிட்டனும், அமெரிக்காவும் பின்பற்றிய நடவடிக்கைகளைக் கூட பின்பற்றுவதற்கு ஒன்றிய அரசுக்கு (மோடி) விருப்பம் இல்லை. அமெரிக்கா அரசாங்கம் மக்களுக்கு 5 டிரில்லியன் டாலர் (5 லட்சம் கோடி ரூபாய்க்கும்) மேல்நிதி ஊக்குவிப்புத் தொகையாகவும், நேரடி உதவித்தொகை அளித்துள்ளது. இது அவர்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 27% கிரேட் பிரிட்டன் அவர்களுடைய உள்நாட்டு உற்பத்தியில் 17% சமமான தொகை நிதி ஊக்குவிப்பு தொகை செலவு செய்திருக்கிறது.

ஆனால் இதற்காக இந்தியாவில் கூடுதலாகச் செய்திருப்பது என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 2% மட்டுமே. ஆனால் ஒன்றிய அரசு 2020-21, 2021-22 இரு பட்ஜெட்டுகளிலும் கார்ப்பரேட் வரிகளை குறைத்திருக்கிறது. மேலும் பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்ப்பதன் மூலம் 3.85 லட்சம் கோடி ரூபாய்கள் உயர்த்திடவும் முன்மொழிவுகளைச் செய்திருக்கிறது. கோவிட் 19 காலத்தில் நவீன தாராளமயக் கொள்கைகளுக்கு ஒன்றிய அரசு பெரும் வர்த்தகர்கள், அந்நிய வர்த்தர்களுக்கு 2020இல் 55 பில்லியன்கள் அதிகரித்திருக்கிறார்கள். 2020இல் உயர் 100 பில்லியர்களின் செல்வாதாரங்கள் 35% உயர்வு ஏற்பட்டிருக்கிறது. மறுபக்கத்தில் பொருளாதார நெருக்கடி காரணமாக முறைசாராத் தொழிலாளர்கள், விவசாய தொழிலாளர்கள், லட்சக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டு வேலை இழந்து கடன்காரர்களாக பசி பட்டினிக் கொடுமைகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். 92% பேர் ஊரடங்கின்போது எந்த ஊதியம் அல்லது நிவாரணமும் பெறவில்லை. 91% வேலை இழந்துள்ளனர். மே 31ல் 74% பேர் தங்கள் கையில் ரூ.200க்கு குறைவாக வைத்திருந்தார்கள்.

**பெட்ரோல், டீசல் வரி உயர்வு**

கொரோனா காலத்தில் கடுமையாக மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கும்போது ஒன்றிய அரசு கூடுதல் செலவினங்களை ஈடுகட்டுவதற்காக கார்ப்பரேட் வரிகளை உயர்த்திடவோ, மூலதன ஆதாயங்கள் மீது வரி விதிப்பதற்கோ அல்லது செல்வவரி விதிப்பதற்கோ அரசாங்கம் மறுத்து வருகிறது. அதற்கு மாறாக வீழ்ந்துள்ள வருவாயை ஈடுகட்டுவதற்கு பெட்ரோல் மற்றும் டீசல்களின் மீது அதீதிமாக வரிகளை



உயர்த்தியிருக்கிறது. 55 நாட்களில் 34 முறை டீசல், பெட்ரோல் விலை உயர்ந்திருக்கிறது. ஒன்றிய அரசு 2021 இறுதிக்குள் லிட்டர் ரூ.125 உயர வாய்ப்புள்ளதாகவும் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒரே ஆண்டில் 200 ரூபாய் அதிகரித்துள்ளது என பத்திரிகைகள் கூறுகின்றன.

வரஇருக்கும் நாட்களில் மக்களுக்கு நிதி உதவி அளித்தல், மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற உத்திரவாதம் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்தல், இலவசமாக உணவு தானியங்கள் அளித்தல், வேலையில்லாதோருக்கு நிவாரண நிதிஉதவி அளித்தல், பொது சுகாதார செலவினங் களை அதிகப்படுத்துதல், பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாப்பதற்கும், அனைத்து தரப்பு மக்களையும் அணிதிரட்டிட வேண்டும்.

**கொழிக்கும் கருப்பு பணமுதலைகள்**

கொரோனா நோய் தொற்று காலத்தில் இந்தியாவில் பெரும் பகுதி மக்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ள நிலை, இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ள செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. சுவிஸ் வங்கியில் இந்தியாவின் பெரும் பணக்காரர்கள் பதுக்கியுள்ள கருப்பு பணம் ஒரே ஆண்டில் 6,625 கோடி ரூபாயிலிருந்து ரூ.20,700 கோடியாக அதிகரித்துள்ளது.




2014 தேர்தலின்போது சுவிஸ் வங்கியில் பதுக்கப்பட்டுள்ள இந்தியர்களின் கருப்புப் பணம் முழுமையாக மீட்கப்படும், அந்த பணத்தை ஒவ்வொரு இந்தியரின் வங்கிக் கணக்கில் 15 லட்சம் போடப்படும் என பிரதமர் அவர்கள் கூறினார். ஆனால் இதுவரை சுவிஸ் வங்கியிலிருந்து நயா பைசா கருப்பு பணம் மீட்கப்பட்டதாக இல்லை. இந்தியர்களின் வங்கியிலும் நயா பைசா கூட செலுத்தப்பட வில்லை.

**ஒன்றிய அரசினால் வங்கித்துறை பின்னடைவு**

இந்த ஆண்டு மே 26 பிரதமர் மோடி அவர்கள் பதவி ஏற்று 7 ஆண்டுகள் முடிந்துள்ளன. இந்த காலகட்டத்தில் வங்கித்துறை ஏராளமான மாற்றங்களை சந்தித்துள்ளது. தற்போது இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும், சென்ட்ரல் வங்கியும் உடனடியாக தனியார்மயமாக்கப்பட்டுள்ளன.

பிரதமர் மோடி அவர்கள் ஆட்சிக்கு வரும்போது 27 வங்கிகள் இருந்தது. ஐடிபிஐ வங்கி இந்தாண்டுக்குள் தனியார்மயப்படுத்தும் வேலை நடக்கிறது. மற்ற 25 அரசு வங்கிகள் 2017, 2019, 2020 ஆண்டுகளில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு 14 அரசு வங்கிகள் காணாமல் போய்விட்டன. இணைப்பின் காரணமாக பல்வேறு வங்கிகளின் 5000 கிளைகள் மூடப்பட்டுள்ளன. வளரும் நாடுகளில் 2500 மக்களுக்கு ஒரு வங்கி இந்தியாவில் 14000 பேருக்கு ஒரு வங்கிக் கிளை உள்ளது. அரசு வங்கிகளை சுருக்கி தனியார் வங்கிகளை விரிவுபடுத்துவது ஒன்றிய அரசின் நோக்கம்.

தற்போதுள்ள 12 அரசு வங்கிகளில் அதிகபட்சமாக 4 வங்கிகளை தவிர மற்ற 8 வங்கிகள் தனியார்மயமாக்கப்படும் என்று ஒன்றிய அரசு (மோடி) அறிவித்துள்ளது.




2016ஆம் ஆண்டு செல்லா நோட்டு அறிவிப்பின்மூலம் கோடிக்கணக்கான மக்கள் கடுமையான அவதிக்குள்ளானார்கள். இளம் குழந்தைகள் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அவர்களுக்கு அஞ்சலி செலுத்தக் கூட மோடி அரசு தயாராக இல்லை.

ஐவிசி திவால் சட்டத்தின்படி மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் சில புள்ளி விவரங்களை பகிர்ந்து கொண்டார். 4.3 லட்சம் கோடி வராக்கடனுக்கான 221 வங்கிகள். இதில் 2.29 லட்சம் கோடி தள்ளுபடி செய்யப்பட்டது. இதில் 7 பெரு நிறுவனங்கள் மட்டும் 1 லட்சம் கோடி. இப்படியாக கார்ப்பரேட்டுகளுக்கு லட்சக்கணக்கான கோடி ரூபாய் வங்கிகளால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

2014ல் மோடி அரசு பதவி ஏற்கும்போது அரசு வங்கிகளின் மொத்த வராக் கடன் ரூ. 2 லட்சத்து 16 ஆயிரம் கோடி. இந்த 7 ஆண்டுகளில் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை ரூ. 6 லட்சம் கோடிக்குமேல். அதற்குபிறகு தற்போது உள்ள வராக்கடன் 9 லட்சம் கோடி இவ்வராக்கடனில் சுமார் 90% அளவுக்கு ரூ. 5 கோடியும், அதற்கு மேல் வாங்கி திருப்பி செலுத்தாத பெரும் கடனாளிகளுக்கு சொந்தமானது. சாமான்ய மக்களுக்கு வழங்கப்படும் கடன் ஆகியவற்றால் ஏற்படும் வராக்கடன் ஒட்டுமொத்த வராக்கடனில் 2%கூட கிடையாது. அரசு வங்கிகளை ஏன் தனியார்மயமாக்குகிறீர்கள் என்று மத்திய நிதியமைச்சரை கேட்டால் நாங்கள் 3 லட்சம் கோடிக்கு மேல் அரசு கஜானாவிலிருந்து அரசு வங்கிகளுக்கு மூலதனமாக வழங்குகிறோம். இது தொடர முடியாது. எனவேதான் தனியார்மய மாக்குகிறோம். இப்பொழுது தெரிகிறதா ஒன்றிய அரசு யாருக்கு ஆதரவு என்று. பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சாதகமாக உள்ளது. இதை எதிர்த்து வங்கி ஊழியர்கள் 10 லட்சம் பேர் மார்ச் 2021 நாடு தழுவிய வேலைநிறுத்தம், மே 26ஆம் தேதி கறுப்பு தினமாக கடைபிடித்தார்கள். அப்படி முழுவதும் ஒன்றிய அரசு தனது நிலையிலிருந்து மாறாமல் இருந்தது. உதாரணம் உலக முழுமைக்கான செல்வம் 2020ல் 7.4% உயர்கிறது. ஆனால் இந்தியாவில் செல்வம் 4.4% சரிகிறது. இது இந்திய பொருளாதாரத்தின் வீழ்ச்சி மட்டுமல்ல மக்களின் வாழ்வாதாரம் கடும் சிதைவுக்கு ஆளாகி வருகிறது.

**விவசாயிகளின் பேரெழுச்சியின் 200வது நாள் போராட்டம்**

உலகில் மிக நீண்ட மிகப் பிரம்மாண்டமான மிக மிக ஒற்றுமைமிக்க அமைதியான விவசாயிகளின் பேரெழுச்சி போராட்டம்.



இது இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு பிறகு இந்த தேசம் கண்டுள்ள மிக வலுவான போராட்டம் என்றால் மிகையல்ல. ஒன்றிய அரசின் கொள்கையை எதிர்த்து மட்டும் அல்ல, அந்த கொள்கைக்கு பின்னணியில் உள்ள கார்ப்பரேட் முதலாளித்துவத்தின் கொடிய சுரண்டலையும் அதற்காக அது மேற்கொள்ளும் கொடூரமான ஒடுக்குமுறையையும் எதிர்த்த திட்டமிடுதலுடன் கூடிய எந்த ஒடுக்குமுறையாலும்கூட தகர்ந்துவிட முடியாத பேரெழுச்சி போராட்டம்.

மோடி அரசின் மூன்று கொடிய வேளாண் சட்டங்களை எதிர்த்து அகில இந்திய விவசாயிகள் ஒருங்கிணைப்புக் குழு அதில் இணைந்துள்ள ஏராளமான சங்கங்கள், இவற்றுடன் இணைந்து 500க்கும் மேற்பட்ட விவசாய சங்கங்கள் இணைந்து கொண்டுள்ளது.

இதுவரையிலும் சுதந்திர இந்தியாவில் இத்தனை விவசாயிகள் அமைப்பு இணைந்து மிக பிரம்மாண்டமான ஒற்றுமையை கட்டமைத் துள்ளது. இந்தப் போராட்டம் சில நாட்களில் முடிந்துவிடும் என்று நரேந்திர மோடி அரசு தப்புக் கணக்கு போட்டது. அதனை தகர்த்தது விவசாயிகளின் எழுச்சி.

வேளாண் சட்டங்களை ரத்து செய் என்ற ஒற்றை கோரிக்கையோடு லட்சங்கள் 10 லட்சங்களாக மாறி விவசாயிகள் எண்ணிக்கை அதிகரித்தது. தில்லி ஸ்தம்பித்தது. ஒன்றிய அரசின் அடக்குமுறை, விவசாயிகள் பேச்சுவார்த்தை என்று இழுத்தடித்தது. எதற்கும் கலங்கவில்லை விவசாயிகள். தில்லியை முற்றுகையிட்டுள்ள விவசாயிகளுக்கு ஆதரவாக நாடு முழுவதும் விவசாயிகள் தொடர்ச்சியான போராட்டம் சம்யுக்த கிசான் மோர்ச்சாவின் தொடர்ச்சியான அறைகூவலை ஏற்று நடத்தி வருகிறார்கள். மத்திய தொழிற்சங்கங்கள், பல்வேறு வெகுஜன அமைப்புகள் ஒட்டுமொத்த உழைக்கும் வர்க்கம் ஆதரவு எழுப்பி வருகிறார்கள்.

வேளாண் சட்டங்கள் ரத்து செய்யும் வரை தில்லியை விட்டு போவதில்லை என்று விவசாயிகள் கூறிவருகிறார்கள். போராட்டக் களத்தில் விவசாயிகள் அதிகபட்ச ஒற்றுமை கட்டப்பட்டுள்ளது. கடும் வெயில், மழை, கடும் குளிர், கொரோனா தொற்று இதையெல்லாம் எதிர்கொண்டு போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

**அமைதியான லட்சத்தீவின் தற்போதை நிலை**

இந்தியாவில் யூனியன் பிரதேசங்களில் மிகவும் அமைதியுடனும் பரஸ்பரம் அன்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் இங்கே சில சிறுசிறு தீவுகளை உள்ளடக்கியது லட்சத்தீவு. இதில் சுமார் 65 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள்.

தற்போது மத்திய அரசு இந்த மக்கள் மீது இரக்கமற்ற முறையில் இவர்களின் வாழ்க்கை, வாழ்வாதாரங்களை, கலாச்சார, உணவு உரிமைகளை பறிக்கும் விதத்தில் புதிய ஆட்சியாளரை (administrator) நியமித்துள்ளது.

லட்சத்தீவில் கோவிட் 19 கொள்ளை நோய் இல்லை. ஆனால் டிசம்பர் 2020 புதிய ஆட்சியாளர் பதவியேற்றுக் கொண்டதன் மூலம் கொரோனா நோய் வந்தது. இத்தீவில் இதுவரை இங்கு ஆட்சியாளர்களாக இருந்தவர்கள் ஐஏஎஸ்



அதிகாரிகளாக இருந்தார்கள். முதன்முறையாக குஜராத் அரசியல்வாதியான பிரபுல் கோடா பட்டேல் என்பவர், குஜராத் சட்டமன்ற உறுப்பினர் 2011ல் குஜராத்தில் பிரதமர் நரேந்திர மோடி முதலமைச்சராக இருந்தபோது உள்துறை இணை அமைச்சராக இருந்தவர் இத்தீவுக்கு ஆட்சியாளராக மத்திய அரசால் நியமனம் செய்யப்பட்டவர்.

ஏற்கனவே இருந்த நபர் தாதர் மற்றும் நாகர்ஹவேலி, டாமன்-டையு ஆகியவை ஒன்றாக இணைக்கப்பட்ட யூனியன் பிரதேசத்திற்கும் ஆட்சியராளராக இருந்தார். இப்பொழுது அங்கே பாமன் கடற்கரையில் இருந்த பழங்குடி வீடுகளை இடித்து அவர்களை வீடற்றவர்களாக மாற்றினார். இதனை எதிர்த்தவர்களை சிறையில் அடைத்தார்.

இப்போது லட்சத்தீவுக்கு இந்த நபர் வந்திருக்கிறார். இங்கு அவர் இந்துத்துவாவையும் நவீன தாராளமயத்தையும் கலந்து குஜராத் மாடலை அமுல்படுத்துகிறார். இத்தீவில் வாழும் மக்களில் 99% முஸ்லிம், இவர்கள் இப்போது மத்திய ஆட்சியாளர்களின் இந்துத்துவா பரிசோதனை மிகவும் கொடூரமான முறையில் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

லட்சத்தீவு மக்கள் மீது பட்டேல், நிலவரி உரிமைகள், லட்சத்தீவு வளர்ச்சி அதிகாரம் ஒழுங்குமுறைப்படுத்துதல் வரைவு நகர திட்டமிடல், அல்லது வளர்ச்சி நடவடிக்கை களுக்காகவே மக்கள் அனுபவித்து வந்த சொத்துக்களை பறிப்பது அல்லது மற்ற இடங்களுக்கு விரட்டுவது, கட்டிடங்கள், பொறியியற் கூடங்கள், அரங்கங்கள், அகழ்வா ராய்ச்சி இடங்கள் என எதுவாக இருந்தாலும் வளர்ச்சி நடவடிக்கைக்கு தேவை என ஆட்சியாளர்களுக்கு அனுமதி அளிக்கிறது. இவ்வாறு செய்தால் இத்தீவு மிகவும் வலிமையற்ற புவியியல் (eco system) அழிந்துவிடும்.

ஆட்சியாளர் பட்டேல் கால்நடை பண்ணை மூடல் அதற்கு பதிலாக அமுல் நிறுவனத்திடம் பால் பொருட்களை சப்ளை செய்திட கேட்டுக் கொண்டிருக்கிறார். அத்துறைகளில் பணியாற்றும் நூற்றுக்கணக்கான தற்காலிக ஊழியர்கள், ஒப்பந்த ஊழியர்கள் பணிநீக்கம்.

இங்கு வாழும் மக்களில் பெரும் பகுதியினர் மீது மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்கிறார்கள். அவர்கள் தங்களுடைய மீன்பிடி வலை மற்றும் உபகரணங்கள் வைப்பதற்கு கட்டி வைத்திருந்த தற்காலிக கட்டிடங்களை கடற்கரை பாதுகாப்பு சட்டத்தின்படி (Coast Guard Act) இடித்து தகர்த்தெறிந்து விட்டார்.

மக்கள் உணவு உட்கொள்ளும் பழக்க வழக்கங்களில் தாக்குதல், பள்ளி நடத்தும் விடுதிகளில் அசைவ உணவும் நிறுத்தப்பட்டுள்ளது. மாடுகளை விற்பதோ, கொல்வதோ, வாங்குவதோ சட்டவிரோதம், இத்தீவில் மக்களின் மதம் மற்றும் கலாச்சாரம், உணவின் அடிப்படையில் மது விற்பனைக்கு தடை இருந்தது. இப்பொழுது நான்கு தீவுகளில் சுற்றுலாவை மேம்படுத்துகிறோம் என்று கூறி மது விற்பனைக்கு அனுமதி.

இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருப்பவர்களுக்கு தேர்தலில் நிற்கத் தடை, பஞ்சாயத்து சட்டம் திருத்தப்பட்டு கொண்டு இருக்கிறது. மேலும் கேரளாவுடன் இலட்சத்தீவு வர்த்தக உறவு இருந்து வந்துள்ளது. தற்போது புதிதாக பிறப்பிக்கப்பட்ட உத்திரவுப்படி லட்சத்தீவிலிருந்து சரக்கு கப்பல் கர்நாடக மாநிலத்தில் உள்ள மங்களூரு துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு வருகிறது.

லட்சத்தீவுகளில் 2020 கோவிட் 19 தொற்று பரவல் இல்லை. தொற்று பரவலை கட்டுப்படுத்த இத்தீவுக்கு வருபவர்கள் 14 நாட்கள் தனிமை படுத்தப்பட்டார்கள். ஆனால் இப்போதைய ஆட்சியாளர் கட்டுப்பாடு விதிகளை நீக்கி விட்டார்கள். இதற்கு பதிலாக PCR Negative சான்று கொடுத்தால் போதும் என்று கூறிவிட்டார்.

இதன்பின்னர்தான் கோவிட் பாதிக்கப்பட்ட முதல் நபர் கண்டறியப்பட்டார். இதனால் இப்போது 7 ஆயிரம் பேர் பாதிப்பு. இது இந்த தீவின் மக்கள் தொகையில் 10% ஆகும்.

ஆட்சியாளருக்கு எதிராக கருத்து கூறினால் கூறுபவர்கள் மீது கடுமையான எதேச்சதிகார ஒடுக்குமுறை, குண்டர் சட்டம், ஓராண்டு சிறைத்தண்டனை. இதுவரை மிகவும் குறைந்த குற்ற விகிதம் இருந்து வந்த இந்த தீவில் தான் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இதற்கு எதிராக போராடினால் கைது நடவடிக்கை, இணைய சமூக வலைதளம் முடக்கம், சமூக ஊடகங்களில் அனுப்பி மூன்று மாணவர்கள் கைது.

லட்சத்தீவு அமைதியற்ற நகரமாக மாறியிருக்கிறது. மத்திய அரசின் ஏஜெண்டாக செயல்படும் ஆட்சியாளர் பட்டேலின் இந்துத்துவா காரணம்.

ஆட்சியாளர் பட்டேல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் உள்துறை அமைச்சரகம் எடுக்க வேண்டும். எடுப்பார்களா கேள்வி.

முஸ்லிம்கள் பெரும்பான்மை உள்ள பிரதேசத்தில் பட்டேலின் கொள்கைகள் காஷ்மீர், குஜராத்தில் பின்பற்றியது போன்று சிறுபான்மை சமூகத்தின் மீது இந்துத்துவா கொள்கை திணிப்பது தனக்கு எதிராக கருத்து கூறினால் எவராக இருந்தாலும் நசுக்குவது போன்ற செயல்களை பட்டேல் செய்து கொண்டிருக்கிறார்.

லட்சத்தீவு மக்கள் தங்களுடைய வாழ்க்கை நடைமுறைகளின்படி ஆட்சியாளர்களின் நடவடிக்கைக்கு அமைதியான முறையில் எதிர்ப்பினை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மீது ஏவப்படும் தாக்குதலுக்கு எதிரான போராட்டத்தில் இவர்கள் தனித்து விடப்படவில்லை. லட்சத்தீவு மக்கள் பேசும் மொழி ஒருபிரிவு மலையாளம் மொழி. லட்சத்தீவு மக்களுடன் கேரள மக்கள் காலம் காலமாக மிகவும் நெருக்கமான கலாச்சார உறவு உள்ளது. எனவே ஒட்டுமொத்த கேரள மக்கள் கிளர்ந்தெழுகிறார்கள்.

பட்டேல் லட்சத்தீவு யூனியன் பிரதேசத்தின் ஆட்சியாளராக இருப்பதிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் மீது மிகவும் அமைதி பூங்காவாக விளங்கும் லட்சத்தீவுக்கு மீள முடியாத அளவுக்கு சேதங்கள் ஏற்படுவதற்கு முன்பு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**மக்கள் நடத்தும் போராட்டத்துக்கு நீதியின் குரல்**

மாற்று கருத்தை முன்வைத்து மக்கள் நடத்தும் போராட்டம் உங்களுக்கு பயங்கரவாதமாக தெரிகிறதா? என்று மோடி தலைமையிலான

ஒன்றிய அரசை தில்லி உயர்நீதிமன்றம் கடுமையாக சாடியிருக்கிறது. இந்தியாவில் ஜனநாயகம் கொஞ்சம் கொஞ்சமாக புறக்கணிக்கப்பட்டு வரும் நிலையில் தில்லி உயர்நீதிமன்றத்தின் இந்த கருத்து மிகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.




மக்களுக்கு போராட்டம் நடத்தும் தார்மீக உரிமையை அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. தங்களுடன் கருத்துவேறுபாடு கொண்டவர்களை அடக்குவது வலுப்பெற்றால் அதுதான் ஜனநாயகத்தின் கருப்பு நாளாகும். பயங்கரவாத செயலுக்கு எதிராக உபா சட்டத்தை சாதாரண குற்றச் செயல்களுக்கு எல்லாம் பயன்படுத்துவது சரியான போக்கு அல்ல'' என்று நீதிபதிகள் கண்டித்திருக்கின்றனர். மேலும் கைது செய்யப்பட்ட மாணவிகளை ஜாமீனில் விடவும் உத்தரவிட்டனர். ஆனாலும் தில்லி காவல் துறை முகவரியை நேரில் ஆய்வு செய்ய வேண்டும் என இதுவரை விடுவிக்காமல் இருக்கிறது.

ஆனால் மறுபுறம் தில்லியில் வெளிப்படையாக மதக்கலவரத்தை தூண்டிய பிஜேபி தலைவர் கபில்மிஸ்ரா அனுராக் தாக்கூர் இதுவரை கைது செய்யப்படவில்லை. ஏன் தில்லி ஜேஎன்யு பல்கலைக்கழகத்தில் காவல்துறை உதவியுடன் சென்று மாணவர்களை தாக்கிய ஆர்எஸ்எஸ் மற்றும் ஏபிவிபி கும்பல் மீது இதுவரை வழக்குகூட பதிவு செய்யப்படவில்லை.

ஆனால் கடந்த சில தினங்களுக்கு முன்பு தான் ஜி7 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி அவர்கள் பேசியபோது ஜனநாயகம், சுதந்திரமும் இந்திய நாகரிகத்தின் பாரம்பரிய விழும்பியங்கள் என கூறியிருக்கிறார். அதே மாநாட்டில் இணையத்தை முடக்குவது ஜனநாயக விரோத செயல் எனும் கூட்டறிக்கையிலும் இந்தியா கையெழுத்திட்டிருக்கிறது. ஆனால் இந்தியாவில் உண்மையில் நடப்பது என்ன?

இணையதள முடக்கத்தில் இந்தியா முதல் இடம். 2014க்கு பின்னர் ஒன்றிய அரசை விமர்சித்தவர்கள் மீதான தேச துரோக வழக்கு 96 சதவீதம் உயர்ந்துள்ளது. புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ள 2301 உபா வழக்குகளில் விசாரணையின்றி அனைவரும் சிறையிலேயே இருக்கின்றனர். சமூக செயற்பாட்டாளர் சுதாபரத்வாஜ் கைது செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆனபிறகும் விசாரணையே இல்லை.

பீமா கொரேகான் வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் 2 ஆண்டுகளாக எந்த விசாரணையும் இல்லாமல் சிறைகளில் உள்ளனர். உயர் தொழில்நுட்பம் பயன்படுத்தி அவர்களுக்கு எதிராக பொய் சாட்சியங்கள் அவர்கள் மீது கணினிகளில் திணித்தனர் என்பது நிரூபிக்கப்பட்ட பின்னரும் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை.

ஏற்கனவே உத்திரப்பிரதேச அரசு தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் போடப்பட்ட 120 வழக்குகளில் 94ஐ அலகாபாத் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து கடுமையாக சாடியிருந்தது. ஜனநாயக குறியீடு பட்டியலில் 2014ல் இந்தியா 27வது இடத்தில் இருந்தது. தற்போது 57வது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது. இந்திய ஜனநாயகத்தையும் அரசியல் சாசனத்தையும் பாதுகாக்க ஒன்றிய அரசு மக்கள் விரோத, ஊழியர்விரோத போக்கினை முறியடித்திட அனைவரும் ஒன்றிணைந்து போராட முன்வர வேண்டும்.

**15.7.2021 தேசிய அளவிலான எதிர்ப்பு நாள்**

ஒன்றிய அரசு மக்கள் விரோத, ஊழியர் விரோத கொள்கைகளை தொடர்ந்து கடைபிடிக்கப்படுவதால் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் 9.6.2021 காணொலி மூலம் தேசிய செயற்குழு நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட கோரிக்கையை வலியுறுத்தி அகில இந்திய அளவில் மாவட்டங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் அமுல்படுத்த வேண்டும், அனைவருக்கும் இலவசமாக தடுப்பூசி போட வேண்டும், கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதிப்படுத்துதல், கொரோனாவால் பாதிக்கப்பட்ட அனைத்து அரசு ஊழியர்களுக்கும் 50 லட்சம் வழங்க வேண்டும், அரசு அலுவலகங்களில் உள்ள காலி பணியிடம் பூர்த்தி

செய்யப்பட வேண்டும், தொகுப்பூதியம், மதிப்பூதியம், தினக்கூலி முறையை ரத்து செய்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், இந்த கொரோனா காலத்தில் சம்பள குறைப்பு, சரண்டர், முடக்கப்பட்ட அகவிலைப்படி வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட அளவில் மிக சக்திமிக்க ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும்.

ஆம் தோழர்களே தமிழகத்தில் நடைபெற்று முடிந்துள்ள சட்டமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி மகத்தான வெற்றி பெற்றுள்ளது. திராவிட முன்னேற்றக்கழகம் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று தமிழக முதல்வராக மாண்புமிகு மு.க.ஸ்டாலின் பொறுப்பு ஏற்று அனைத்துத்தரப்பு கட்சிகளையும் இணைத்துக் கொண்டு இந்த கொரோனா இரண்டாவது அலையை வெற்றிகரமாக தமிழக அரசு மக்கள் சேவையாற்றி வருகிறது.

தமிழக அரசு தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய காலத்தில் அரசு ஊழியர்கள்-ஆசிரியர் கோரிக்கைகளை கழக அரசு வந்தவுடன் அரசு ஊழியர்களின் கோரிக்கை தீர்த்து வைக்கப்படும் என்று கடந்த ஜனவரி 2021, 27ஆம் தேதி மதுரையில் நடந்த மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாட்டில் காணொலி காட்சி மூலம் பங்கேற்று உறுதியளித்துள்ளதை தொடர்ந்து தமிழக அரசின் பல்வேறு மக்கள் நலப்பணிகளை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் முழு ஒத்துழைப்பை வழங்கி வருகிறோம்.

ஒட்டுமொத்த அரசு ஊழியர்களின் நலனில் அக்கறை உள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கங்ததின் சார்பாக நேரடியாக சந்திப்பதற்கு காலமும் நேரமும் ஒதுக்கித்தர அனுமதி கேட்டு கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. விரைவில் மாநில நிர்வாகிகள் தமிழக முதலமைச்சர் அவர்களை சந்தித்து கோரிக்கை மனு அளித்து நல்ல தீர்வுகளை காண்போம் தோழர்களே.

காலமறிந்து கடமை ஆற்றுவோம்
சூழல் அறிந்து விழிப்போடு செயல்படுவோம்
கொரோனா கொடுந்தொற்றிலிருந்து
அனைவரையும் காப்போம்.

■

## மேட்டூர் வட்டக் கிளை சங்கக் கட்டிடம் திறப்பு விழா

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க சேலம் மாவட்டம் மேட்டூர் வட்ட கிளையில் கட்டி முடித்துள்ள சங்க கட்டிடம் 2.7.2021 அன்று திறந்து வைக்கப்பட்டது. விழாவின் முதல் நிகழ்வாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியினை மாவட்ட செயலாளர் சுரேஷ் மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியினை மாவட்ட தலைவர் முருகப்பெருமாள் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தை திறப்பு விழா கல்வெட்டினை கட்டடக் குழு தலைவர் சண்முகம் திறந்து வைத்தார். சங்க கட்டிடத்தை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் சீனிவாசன் திறந்து வைத்தார்.

சங்க கட்டிடத்தில் தோழர் எம் ஆர் அப்பன் அவர்களின் படத்தினை மாவட்ட பொருளாளர் செல்வம், தோழர் இரா.முத்துசுந்தரம் அவர்களின் படத்தினை மாவட்ட துணைத் தலைவர் திருவரங்கன், தோழர் கூடலிங்கம் அவர்களின் படத்தினை மாவட்ட துணை தலைவர் சண்முகம், தோழர் கே.பாலு கண்ணன் அவர்கள் நினைவு நூலகத்தை மாவட்ட துணைத் தலைவர் ராணி ஆகியோர் திறந்து வைத்தனர்.

பின்னர் நடைபெற்ற கட்டடத் திறப்பு விழா கூட்டத்தில் வட்ட கிளை தலைவர் வெற்றிவேல் தலைமையேற்றார். நிகழ்ச்சிக்கு வந்திருந்த தோழர்களை வட்ட கிளை செயலாளர் சிங்கராயன் வரவேற்றார். மாவட்ட தலைவர் முருகப்பெருமாள், மாவட்டச் செயலாளர் சுரேஷ், மாவட்ட பொருளாளர் செல்வம், மாவட்ட துணைத் தலைவர்கள் ராணி, சண்முகம், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் திருவரங்கன், கட்டடக் குழு தலைவர் சண்முகம், சிஐடியுவின் கருப்பண்ணன், கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்கத்தின் முத்துக்குமரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். கட்டிட வரவு செலவு விபரத்தினை கட்டடக் குழு பொருளாளர் வாசு முன்வைத்தார். நிறைவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் சீனிவாசன் சிறப்புரை ஆற்றினார். வட்ட கிளை பொருளாளர் வாசு நன்றி உரையாற்றினார்

■

# தேர்தல் பணியில் ஈடுபட்ட 1621 ஆசிரியர்கள் கொரானா நோயின் பாதிப்பு ஏற்பட்டு இறந்து போயினர்

உத்தரபிரதேசத்தில் கொரானா தொற்று அதிகமாக இருந்தபொழுது பொது பஞ்சாயத்து தேர்தல் நடத்தப்பட்டது. மாநில அரசு இரண்டரை லட்சம் ஆசிரியர்களை தேர்தல் பணிக்கு பயன் படுத்தியது. UP Teacher's association கொரானா பாதிப்பு அதிகம் இருந்ததால் தேர்தலை தள்ளி வைக்க கோரியது. அரசு அதை ஏற்றுக்கொள்ள வில்லை. மாநில முதல்வர் yogiadityanath மாநிலத்தில் தனக்குள்ள செல்வாக்கினை தெரிந்து கொள்ள விரும்பினார். எனவே தேர்தல் நடத்தப்பட்டது.

ஆனால், நடந்தது என்ன? அறிந்து கொள்வோம்.

கல்யாணி என்ற 27 வயது பெண் ஆசிரியர் jaunpur மாவட்ட த்தில் வேலை பார்த்து வந்தார். 8 மாத கர்ப்பிணி யாக இருந்தார். தேர்தல் பணிக்கு வரவேண்டும் என ஏப்ரல் 9ம் தேதி அன்று அவருக்கு உத்தரவு வழங்கப்பட்டது. அவர் உடல் நிலையை சொல்லி விடுப்பு விண்ணப்பம் கொடுத்தார். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர் ஏப்ரல் 14 அன்று தேர்தல் பயிற்சி வகுப்பிற்கு சென்றார். அங்கு தேர்தல் பணியில் ஈடுபட மறுக்கும் ஊழியர்கள் மீது வழக்கு தொடரப் படும் என்று மிரட்டல் விடுக்கப் பட்டது. ஆசிரியர் கல்யாணி தன் மோசமான உடல் நிலையுடன் வேலை பறிபோய் விடும் என்று பயந்து ஏப்ரல் 15 அன்று தேர்தல் பணியாற்றினார். ஏப்ரல் 17 அன்று அவருக்கு தொற்று தெரிய வந்து, oxygen level மிகவும் குறைந்து போனது. மருத்துவமனை தேடி அலைந்து ஒரு வழியாக மருத்துவமனை சேர்க்க ப்பட்டார். ஆனால் சிகிச்சை பலன் அளிக்கவில்லை. ஏப்ரல் 24 அன்று ஆசிரியர் கல்யாணி இறந்தார். இது கொலையின்றி வேறென்ன?

## மற்றொரு சம்பவம்

Lalankumar மற்றும் அவர் மனைவி meenakumari இருவரும் சித்தார்த் நகரில் ஆசிரியர்களாக பணி புரிந்து வந்தனர். இருவரும், மேலே குறிப்பிட்ட கல்யாணி அவர்களை போலவே, ஏப்ரல் 11 அன்று தேர்தல் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். ஏப்ரல் 17 அன்று lalankumar ன் உடல்நிலை மோசமானது. அவர் டெஸ்ட் எடுத்தார். ரிசல்ட் நெகடிவ் என்று வந்தது. ஆனால் உடல் நிலை சரியாக வில்லை. ஏப்ரல் 18 முதல் மருத்துவ மனைக்கு அலைந்தார். அவருடைய டெஸ்ட் ரிப்போர்ட் நெகடிவ் என்று இருந்ததால் மருத்துவ மனையில் இடம் கிடைக்க வில்லை. ஏப்ரல் 23 அன்று மீண்டும் டெஸ்ட் எடுத்தார். தொற்று உறுதியானது. ஏப்ரல் 24 அன்று மருத்துவமனையில் அவருக்கு இடம் கிடைத்தது. ஆனால் பலனில்லை. ஏப்ரல் 25 அன்று அவர் இறந்து போனார்.

அவர் இறப்புக்கு பின்னால் கூட தேர்தல் பணியில் பங்கேற்க வில்லை என்று மாநில அரசு யார் மீதேனும் வழக்கு தொடர்ந்து இருந்தால் தகுந்த விளக்கம் அளிக்க வேண்டுமென மாநில கல்வித்துறை உத்தரவு இட்டது. இது ஒருபுறம் இருக்க laalankumar மனைவி meenakumari யும் தொற்று ஏற்பட்டு sidhaarthnagar மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அவர் மே மாதம் 4 ம் தேதி அன்று சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்து போனார். அவர் இறக்கும் போது அவருக்கு தன் கணவர் இறந்தது கூட தெரியாது. இந்த இரண்டு சம்பவங்களை பார்க்கும் போது ஆசிரியர்கள் அங்கு எவ்வாறு நடத்தபடுகிறார்கள் என்பது தெரியும்.

இந்த இரண்டு சம்பவங்களுக்கு பின்னால், UP ஆசிரியர் சங்கம் அந்த கால கட்டத்தில் மாநில பஞ்சாயத்து தேர்தல் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டும் தேர்தலில் பணியாற்றி கொரானா தொற்று ஏற்பட்டும் இறந்து போன 708 ஆசிரியர் பட்டியலை அரசிடம் கொடுத்து பாதிக்கப் பட்ட ஆசிரியர் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தது. மேலும் இதற்காக சங்கம் உயர்நீதி மன்றத்தை நாடியது. தேர்தல் முடிவு பெற்று இருந்தாலும் வாக்கு எண்ணிக்கை பணிகளில் தாங்கள் பங்கு கொள்ள மாட்டோம் என்று அறிவித்தது.

ஆனால், மாநில அரசு மற்றும் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி ஆசிரியர்கள் வாக்கு எண்ணிக்கை பணிக்கு வரவழைக்கப் பட்டனர். 829 மையங்களில் வாக்கு எண்ணிக்கை பணி நடை

பெற்றது. ஒவ்வொரு மையத்திலும் 75 பேர்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்ற உத்தரவு இருந்தாலும், நிலைமை அவ்வாறு இருக்க வில்லை. எல்லை மீறியது.

இவை எல்லாம் முடிந்தவுடன், ஏராளமான ஆசிரியர்களுக்கு தொற்று ஏற்பட்ட து. கணக்கு பார்த்தபோது 1621 ஆசிரியர்கள் இறந்து போயிருந்தார்கள்.

மாநில அரசு ஒரு இரங்கல் கூட தெரிவிக்க வில்லை.

மேலும் அரசு தேர்தல் பணியின்போது 3 ஆசிரியர்கள் மட்டுமே இறந்து போனதாக அறிவித்தது.

அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் பொது நல வழக்கு தொடரப்பட்டு இருந்தது. நீதி மன்றம் இறந்து போன ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு 1 கோடி ரூபாய் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று உத்தரவு இட்டது. ஆனால், உ பி அரசு 30 லட்சம் ரூபாய் மட்டுமே வழங்குவதாக அறிவித்தது.

இது குறித்து ஆசிரியர் சங்க தலைவர் தினேஷ் சந்திரா சர்மா கூறும் போது, UP மாநில நிவாரண நிதிக்கு ஆசிரியர்கள் சார்பாக 76 கோடி ரூபாய் நன்கொடை வழங்கி உள்ளதாக கூறினார்.

நடத்தப் பட்ட பஞ்சாயத்து தேர்தலினால் 1621 ஆசிரியர் குடும்பங்கள் நாசமாகி விட்டது. மாநில அரசு உயர்நீதிமன்றத்தில் கொரானா பாதிப்பின் உண்மை நிலவரங் களை சொல்லவில்லை.

மாநில அரசு தன் விருப்பப்படி முடிவுகள் எடுத்தது. உயர் நீதி மன்றம் lockdown உத்தரவு போட்டது. மாநில அரசு, உயர் நீதி மன்ற உத்தரவுக்கு எதிராக உச்ச நீதி மன்றத்தில் தடை உத்தரவு பெற்றது.

மாநில முதல்வர் yogiadithyanath மாநிலத்தில் தன் பலம் என்ன என்பதை தெரிந்து கொள்வதில் தான் ஆர்வம் காட்டினார். ஆனால் தேர்தல் முடிவுகள் அவருக்கு எதிராகத்தான் இருந்தது.

மொத்தத்தில் இந்த சம்பவங்கள் 1621 ஆசிரியர்களின் மரணம் பற்றியது மட்டுமல்ல. 1621ஆசிரியர் குடும்பங்கள் அனாதை ஆக்கப்பட்டது பற்றியது.

எழுதியவர் - Madhu Garg
செய்தி - Peoples Democracy
தமிழில் - பி.கருணாகரன், கோவை

## ஊழியர் விரோத போக்கை கண்டித்து ஆர்ப்பாட்டம்



**செ**ங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுகுன்றம் வட்டார வளர்ச்சி (கி.ஊ.) அலுவலர் ஆர்.உமா அவர்களின் ஊழியர் விரோதப் போக்கை கண்டித்து திருக்கழுகுன்றம் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பாக 10.06.2021 அன்று மாலை நேர ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் ஏ.சங்கர் தலைமையேற்றார். வட்டக்கிளை நிர்வாகிகள் ஜி.பூபதி, கே.பெருமாள், எம்.சாந்தி, இ.சாமிக்கண்ணு, என்.கலா ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டச் செயலாளர் வி.கங்காதரன் விளக்கவுரையாற்றினார்.

அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட பொருளாளர் எம்.என்.ஸ்ரீராம், மாவட்ட துணைத் தலைவர் ஆர்.கோவிந்தன், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வி.விக்டர் சுரேஷ்குமார், சுகாதார ஆய்வாளர் சங்கத்தின் எஸ்.வசந்தகுமார், அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் ஜெ.செல்வம், அரசு ஊழியர் சங்கத்தின் செய்யூர் வட்ட செயலாளர் எம்.ராமு, வருவாய்த்துறை கிராம உதவியாளர் சங்கத்தின் எம்.வேல்முருகன், கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் கே.பூங்குழலி ஆகியோர் கண்டன உரையாற்றினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் எம்.தாமோதரன் சிறப்புரை யாற்றினார். மாவட்டத் தலைவர் சி.முகம்மது உசேன் நிறைவுரையாற்றினார். வட்டப் பொருளாளர் ஏ.முருகேசன் நன்றி கூறினார்.

இந்நிகழ்வில் துறைவாரிசங்க நிர்வாகிகள், அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் என 40 பெண்கள் உட்பட 70 பேர் பேருந்து போக்குவரத்து வசதி இல்லாத காலத்திலும் முககவசம் அணிந்து சமூக இடைவெளியுடன் கலந்து கொண்டனர். ■

# 'தியாக தீபங்கள்' நூல் மதிப்புரை

"என்றும்
கூரை முகட்டுப் பட்சிகளின் கரைதல்களுடன்
இமைகளைப் பிரித்து
வாழ்த்துச் சொல்லும் இளங்காலை
ஓர் உடம்பு முறுக்கலில் மெல்லமே பிரியும்
நேற்றின் அயர்வுகள்
வாசலைத் தாண்டி
உப்புக்காரனின் குரலோடு
ஒரு மாபெரும் இயக்கம்
தொடங்கிவிட்டது
குளிக்க சாப்பிட வேலைக்கென
கலகத்துக்கு அழைக்கும் வாழ்க்கையை
என்றும் நேசிப்பேன்"

..சமயவேல்

ஆம். கலகம் பிறந்தால் தானே நீதி பிறக்கிறது.

அந்தக் கலகம் உழைக்கும் மக்களிடமிருந்து எனின் அதன் பின்னால் அர்ப்பணிப்பு மிக்க மனிதர்கள் இருக்கிறார்கள் என்று பொருள்.

அத்தகைய அர்ப்பணிப்பு மிக்கவர்கள் தங்களுக்குள் ஒரு தத்துவத்தை வரித்துக் கொண்டவர்கள் எனின் அது சிறப்பு. தத்துவமும் நடைமுறையும் உடலும் உயிரும் போல. இரண்டில் ஒன்று இல்லையென்றாலும் அது வெற்றி பெறாது. எனவேதான் ஒரு தத்துவத்தை வரித்துக் கொண்டு செயல்படும் தோழர்கள் சமூகத்தின் முன் தனியாகத் தெரிகிறார்கள். குறிப்பாகக் கம்யூனிஸ்டுகள்.

அத்தகைய கம்யூனிஸ்டுகளின் களப் பணியும் எழுத்துப் பணியும் உழைக்கும் மக்களின் நலன் சார்ந்ததாகவும், அந்நலனுக்கு முட்டுக்கட்டையாக இருப்பவற்றை எதிர்ப்பதாகவும், அவ்வாறு எதிர்க்கும் மகத்தானவர்களை மக்களுக்கு அறிமுகம் செய்வதாகவும் இருப்பது யதார்த்தமே.

உழைக்கும் மக்கள் நலனுக்கு எதிராக ஆட்சியாளர்கள் பின்பற்றும் பிற்போக்கு நடவடிக்கைகள், பெண்ணடிமைத்தனம் போன்றவற்றுக்கு எதிராக களத்தில் மக்களைத் திரட்டிப் போராடுவதும் பேனா முனையில் பணியாற்றி எழுச்சியூட்டுவதும் முற்போக்கு எழுத்தாளர்களின் கை வந்த கலை.

அத்தகைய முற்போக்கு எழுத்தாளர்களின் வரிசையில் முன்னணிப் பாத்திரத்தை வகிக்கும் தோழர் ஜோதிமதியின் 'தியாக தீபங்கள்' கட்டுரை தொகுப்பு நூல் 20 கட்டுரைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

இவற்றுள் 6 கட்டுரைகள் மட்டுமே ஆண் ஆளுமைகளைப் பற்றி எழுதப்பட்டுள்ளன. எஞ்சிய 14 கட்டுரைகளும் பெண் ஆளுமைகளைப் பற்றியே எழுதப்பட்டுள்ளன.

நால்வரில் நேதாஜி, ஜீவா, பகத்சிங், சார்லி சாப்ளின் ஆகியோர் பரவலாக அறியப்பட்டவர்கள். அவர்களைப் பற்றி நிறையவே நூல்கள் வந்துவிட்டன.

ஆனால் புரட்சி நாயகன் இல்மெஸ் குகனே, ஜான் வால்டர் ஆகியோர் அனேகமாக தமிழர்கள் பெரும்பான்மையோரால் அறியப்படாதவர்கள். குறிப்பாக இல்மெஸ் குனே துருக்கி கம்யூனிஸ்ட் என்பதும் அரசின் அடக்குமுறைகளை எதிர்த்துக் களம் கண்டு சிறையில் பல்லாண்டுகள் இருந்த போதிலும் துவளாமல் தொடர்ந்து கலைப்பணியில் இயங்கிய உழைப்போர் மத்தியில் ஆதர்ச நாயகனாக விளங்கியவர் என்பதும் அவரது கல்லறை பாரிஸ் கம்யூன் தியாகிகளுக்குப் பக்கத்தில் அமைக்கப்பட்டதும் நூலாசிரியர் மூலமாக உணர முடிந்ததில் நாம் நூலாசிரியருக்கு நன்றிக் கடன் பட்டவர்கள்.

பெண் ஆளுமைகளின் தியாக வாழ்வு இந்நூலை வாசிப்பவர்களை மலைக்க வைக்கிறது. சாவித்திரி பாய் பூலே, கல்பனாதத் போன்றவர்கள் அறியப்பட்டவர்கள் ஆயினும் நூலாசிரியர் இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பலர் வாசகர்களுக்குப் புதுமுகங்கள்.

கோதை நாயகி சுதந்திரப் போராட்ட தியாகி என்பதும் 115 நாவல்களை எழுதிக் குவித்தும் அவர் பரவலாக அறியப்படாத குடத்துள் இட்ட விளக்காகத் திகழ்ந்துள்ளதும் தெரிய வருகிறது.

புரட்சியாளர் வாடேட்டர் புரட்சியாளர்கள் சூர்யாசென், கல்பனாதத் ஆகியோருடன் இணைந்து செயல்பட்டவர் என்பதும் 21 வயதில் புரட்சி நிகழ்வின் போது உயிரிழந்த முதல் பெண் பிரீதிலதா என்பதும் நெகிழ்ச்சிக்குரியது.

கீழ்த் தஞ்சையில் புரட்சிகரமான பணிகளை மேற்கொண்ட மணியம்மை பன்முகத் தன்மையுடன் சிங்க நிகர் போராளியாக களப் பணியாற்றியது நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. "இரண்டரை வருட ஜெயில் வாசல்

திறந்த பின்பு விடுதலையான அவர் மீண்டும் ஜோல்னா பையை மாட்டிக் கொண்டு ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் இருக்கும் இடம் தேடி சிறகடிக்கலானார்" என நூலாசிரியர் குறிப்பிடுவது மணியம்மையின் நெஞ்சுரத்தைக் காட்டுகிறது.

சுதந்திர போராட்டத் தியாகி கல்பனாதத் கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் ஜோஷியின் மனைவியாக, செங்கொடி இயக்கத்தின் முக்கியத் தலைவராக வாழ்ந்து காட்டியதைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஜோதிமதி.

எழுத்தாயுதம் ஏந்தியவரும் 'லஜ்ஜா' எனும் சிறந்த நாவலுக்குச் சொந்தக்காரருமான தஸ்லிமா நஸ்ரின் இஸ்லாமிய பழமைவாதத்தைத் தமது வலிமையான எழுத்துக்கள் மூலம் இயங்கியதைக் காட்சிப் படுத்தியுள்ளார் ஜோதிமதி.

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் ருக்மணி இலட்சுமிபதியை அறிமுகப்படுத்தும் நூலாசிரியர், 1937ஆம் ஆண்டே சட்டமன்றத் தேர்தலில் சென்னை மாநகரப் பகுதியில் போட்டியிட்டு வெற்றி கண்டதைப் பதிவு செய்துள்ளார்.மேலும் ராஜாஜி தலைமையிலான அமைச்சரவையில் அவையை வழிநடத்தும் சபாநாயகராகப் பொறுப்பேற்றதோடு இப்பதவிக்கு வந்த முதல் பெண்மணி இவர்தான் என்பதையும் பெருமையுடன் சுட்டிக் காட்டுகிறார். மேலும் 1946ஆம் ஆண்டு நடை பெற்ற சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வென்றதும் சுகாதாரத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றதும் வாசகர்களுக்குச் சொல்லப்பட்ட முக்கியச் செய்தியாகும்.

கவிச் சக்கரவர்த்தினி வாலம் அம்மையாரின் கவிதைகளை தியாகராஜ பாகவதர், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் ஆகியோர் பாராட்டியதும், அவர்கள் இவரைத் திரைப்படங்களுக்கும் பாடல் எழுதக் கேட்டபோது வாலம் அம்மையார் உறுதியாக மறுத்ததும் நூலில் இடம் பெற்றுள்ள முக்கியமான நிகழ்வாகும்.

இனவெறியைக் களத்தில் நின்று எதிர்த்துப் போராடிப் புரட்சிப் பெண்ணாக ரோசா பாக்ஸ் வலம் வருவது வியப்பு. "பேருந்துகளில் நிறத்தினைக் காரணம் காட்டி பாகுபாடு? என்பது கூடாது. அது சட்டத்திற்குப் புறம்பான செயல் ஆகும்" என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பொன்றினை அமெரிக்க உச்சநீதி மன்றம் பிறப்பிக்கக் காரணமாய் அமைந்தது இவரது போராட்டம். மேலும் இவரது மரணத்திற்கு அஞ்சலி செலுத்தும் விதமாக மாண்ட்கோமரியிலும், டெட்ராய்டிலும்இயங்கும் அத்தனை பேருந்துகளிலும் முன் இருக்கைகள் பதிவு செய்யப்பட்டு கறுப்புக் கொடியினைத் தாங்கி பேருந்துகள் பயணித்தன. வெள்ளையர்கள் மரியாதை செலுத்தும் விதமாக அதன் அருகில் நின்று கொண்டு பயணித்தனர்" எனும் அரிய செய்தியை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

இக்கட்டுரை நூலில் மாநில, தேச, சர்வதேச அளவிலான முக்கியப் போராளிகளை.. இலக்கியவாதிகளை அடையாளங் காட்டியுள்ள நூலாசிரியர் ஜோதிமதியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஒவ்வொரு கட்டுரைக்கும் ஏற்றவாறு மகாகவி பாரதியார் பாடல் வரிகளைத் தேர்வு செய்து இடம் பெறச் செய்திருப்பது சிறப்பு. எல்லாவற்றுக்கும் மேலாக நூலை வாசிக்கும்போது அலுப்புத் தட்டாமல், கடின நடையால் மிரட்டாமல் அனைவரும் படித்துப் புரிந்து பயன்பெறும் வகையில் எளிய நடையில் எழுதியுள்ளார் நூலாசிரியர். இதற்காக இந்நூல் மேலும் பாராட்டுக்குரியது.

அணிந்துரையில் தோழர் த.லெனின் குறிப்பிட்டவாறு வரலாறு படிப்பது வற்றிப் போன இக்கால கட்டத்தில்..வரலாற்றைத் திரித்துத் தந்து கொண்டிருக்கும் ஆட்சியாளர்களின் இக்காலகட்டத்தில், கருத்துரிமையைக் காலில் போட்டு மிதிக்கும் பாசிச ஆட்சியின் அத்து மீறல்களும் அராஜகங்களும் அரங்கேறி வரும் இக்காலகட்டத்தில் இது போன்ற நூல்கள் நிறைய வெளியிடப்படுவதும் வாசிப்பதும் வாசித்ததன் விளைவாக பேனா முனையிலும் போர் முனையிலும் முன் நிற்க வேண்டியதும் காலத்தின் கட்டாயம். இதற்கான உந்துசக்தியாக இந்நூலைப் படைத்திட்ட முற்போக்கு எழுத்தாளர் கரிசல் குளம் ஜோதிமதிக்கும் அழகிய முறையில் அச்சிட்ட கார்த்திகா பதிப்பகத்திற்கும் பாராட்டு மலர்கள்.

'தியாக தீபங்கள்'
கரிசல் குளம் ஜோதிமதி
கார்த்திகா பதிப்பகம்
4/14 பெரியார் நகர்
சேமங்கி அஞ்சல்
கரூர் மாவட்டம். 639 117.
பக்கங்கள் 128 விலை..ரூ.120.
வாசிக்க வேண்டிய வரலாற்றுப் பெட்டகம்

- **பெரணமல்லூர் சேகரன்**

# ஜூலை 23: சுப்பிரமணிய சிவா நினைவு நாள்

வரலாறு திருத்தப்பட்டு வரும் காலமிது. மகாத்மா காந்தி கொல்லப்பட்டதை இயற்கை மரணமாகச் சித்தரித்தும் மகாத்மாவைக் கொன்ற நாதுராம் கோட்சேவை தேசப் பற்றாளன் என்றும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் பாடப் புத்தகங்கள் மூலமாக பிஞ்சு உள்ளங்களில் நச்சு விதைகளை விதைத்து வருவது கண்கூடு.



இந்நிலையில் 'மறந்து கொண்டேயிருப்பது மக்களின் இயல்பு.. நினைவுபடுத்திக் கொண்டேயிருப்பது நமது கடமை' எனும் அடிப்படையில் இந்தியச் சுதந்திரப் போரில் ஆகுதியான ஆளுமைகளை நினைவுகூர்தல் அவசியம்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இந்திய விடுதலைப்போராட்ட வீரர்களுள் முக்கிய ஆளுமையாய் விளங்கியவர்களுள் சுப்பிரமணிய சிவா குறிப்பிடத்தக்கவர் ஆவார். அரசியலையும் ஆன்மீகத்தையும் இணைத்து விடுதலைக்காக அவர் போராடினார். தமிழக மக்களுக்கு விடுதலைத் தாகம் ஏற்படச்செய்த சிறந்த மேடைப்பேச்சாளர் மற்றும் சிறந்த இதழாளர்; 1913-ல் 'ஞானபாநு' இதழை நடத்தினார். விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனாருடனும், மகாகவி பாரதியாருடனும் நெருங்கிப்பழகியவர். இவர் 'வீரமுரசு' எனப் புகழப்பட்டார்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டுவில் 1884-ம் ஆண்டு அக்டோபர் 4-ம் நாள் 'சிவம்' என்றும், 'சிவா' என்றும் அழைக்கப்பட்ட சுப்பிரமணிய சிவா பிறந்தார். இவர் தந்தையார் ராஜம் ஐயர், தாயார் நாகம்மாள்(நாகலட்சுமி). பெற்றோர் இட்ட பெயர் சுப்பராமன். இவருக்கு ஞானாம்பாள், தைலாம்பாளென்ற இரு சகோதரிகளும், வைத்தியநாதன் என்ற ஒரு சகோதரரும் இருந்தனர். இவர் 12 வயது வரை மதுரையில் இருந்தார். கோவை புனித மைக்கேல்ஸ் கல்லூரியில் படித்தார். பின்னர், வறுமை காரணமாக திருவனந்தபுரம் சென்று அங்கு இலவசமாக உணவு படைக்கும் ஊட்டுப்புறையில் உணவருந்திக் கொண்டே, பட்ட மேற்படிப்பு படித்தார். 1899-ல் மீனாட்சியம்மை என்பவரைத் திருமணம் செய்துகொண்டார்.

1902-ல் திருவனந்தபுரத்திலுள்ள கொட்டாரக் கரையில் நாயர் வகுப்பைச் சேர்ந்த சதானந்த சுவாமிகள் என்ற ராஜயோகியைச் சந்தித்து, அவரிடம் சிலகாலம் ராஜயோகம் பயின்றார். 1906-ல் சிவாவின் தந்தை மறைவெய்தினார்.

1906-ல் ஆங்கிலேய அதிகாரி கர்சான் பிரபு, வங்கத்தை மதத்தின் அடிப்படையில் இரண்டாகப் பிரித்தார். இந்த பிரிவினைக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. சுதேச உணர்வு மேலோங்கியது. எங்கும் 'வந்தேமாதரம்' என்னும் முழக்கங்கள் எழுந்தன.

1906-07ல் திருவனந்தபுரத்தில் 'தர்ம பரிபாலன சமாஜம் அமைப்பை, சுப்பிரமணிய சிவா உருவாக்கினார், இளைஞர்களை கூட்டுவித்துச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி, தேசபக்தி ஊட்டும் பணியில் ஈடுபட்டார்.அரசாட்சிக்கு எதிராக இவரின் செயல்பாடுகள் அமைந்ததால், இவர் திருவனந்தபுரத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இதன்பிறகு சுப்பிரமணிய சிவா கால் நடையாகவே ஊர் ஊராய்ச் சென்று தேசிய பிரச்சாரம் செய்ய முற்பட்டார்.

தூத்துக்குடிக்கு வந்தபொழுது தூத்துக்குடியில் வழக்குரைஞராக இருந்த ஒட்டப்பிடாரம் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கினார். இக்காலத்தில் சிதம்பரனாருக்கும் சுப்பிரமணிய சிவாவுக்கும்

உளமார்ந்த நட்பு ஏற்பட்டது. இவர்களின் சுதேச உணர்வைத் தன் 'சுதேச கீதங்களால்' இவர்களின் நண்பரான பாரதியார் தூண்டிவிட்டார். 1908-ல் சிதம்பரனாரும், சிவாவும் இணைந்து நெல்லைச் சீமையில் சுற்றுப்பயணம் செய்து தேசிய பரப்புரை செய்தனர். 12.3.1908-ல் சுப்பிரமணிய சிவா இந்திய சுதந்திரம் குறித்த பரப்புரையில் ஈடுபட்டதை ராஜத்துரோகக் குற்றம் புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார் . பின்னர், 2.11.1912-ல் விடுதலையடைந்தார்.

பிறகு சுப்பிரமணிய சிவா, சென்னையில் குடியேறி "ஞானபாநு" என்ற மாத இதழைத் தொடங்கினார். இதற்கிடையில் 15.5.1915-ல் சிவாவின் மனைவி மீனாட்சி மரணமடைந்தார். பல்வேறு சூழ்நிலை காரணமாக, "ஞானபாநு" இதழ் நின்றதன் பின்பு, 1916-ல் 'பிரபஞ்ச மித்திரன்' என்ற வார இதழை ஆரம்பித்து சிலகாலம் நடத்தினார். இதில் 'நாரதர்' என்ற புனைப்பெயரில், சுப்பிரமணிய சிவா தனது கட்டுரைகளை எழுதிவந்தார். சுமார் இருபது நூல்களுக்கு மேலாக எழுதினார். 1920-ல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குப் பிரதிநிதியாகச் சென்றார்.

1921-ல் துறவி போன்று காவியுடை அணியத் தொடங்கினார். "ஸ்வதந்ரானந்தர்" என்ற பெயரையும் சூட்டிக்கொண்டார். பாரத மாதாவுக்குக் கோயில் ஒன்று கட்டி முடிக்கத் திட்டம் வகுத்தார். 17.11.1921-ல் இரண்டாவது முறையாக, ராஜத்துரோகக் குற்றத்துக்காகச் சிவாவின் மீது, ஆங்கிலேய அரசு வழக்குத் தொடுத்தது. இதில், சுப்பிரமணிய சிவாவுக்கு, இரண்டரை ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. திருச்சி சிறையில் அடைக்கப்பட்ட அவர் அங்கு, தொழு நோய்வாய்ப்பட்டு அவதிபட்டார். படுத்த படுக்கையாகிவிட்ட நிலையில் 12.1.1922-ல் விடுதலையானார்.

விடுதலையான சிவா திரும்பவும் சென்னைக்கு வந்து, சில நாட்கள் தங்கினார். உடல்நிலை சற்று தேறியதும், திரும்பவும் அரசியல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஆரம்பித்தார். 1923-ம் ஆண்டு தொடக்கத்தில் தருமபுரி, கோவை, பாப்பாரப்பட்டி முதலான ஊர்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். பாப்பாரப்பட்டியில் பாரதமாதா கோயிலுக்கான இடத்தைத் தேர்ந்தெடுத்தார். அவ்வூரில் நிலம் பெற்று அதற்கு "பாரதபுரம்" என்று பெயர் சூட்டினார். கோயிலுக்கான



சுப்ரமணிய சிவா மணிமண்டபம்

அடிக்கல் நாட்டு விழாவைச் சித்ரஞ்சன்தாசைக்கொண்டு நடத்தினார். 1924-ல் காசியில் வசித்துவந்த இவரது தாயார் காலமானார் . இவருக்கு ஏற்பட்டிருந்த தொழுநோயைக் காரணம் காட்டி, அவர் ரயில் பயணம் செய்ய ஆங்கில அரசு தடைவிதித்தது.

பின்னர் 23.7.1925 வியாழக்கிழமை காலை ஐந்து மணிக்கு, தம்முடைய நாற்பத்தோராவது வயதில் சிவா மறைந்தார். சுப்பிரமணிய சிவா, "மோட்ச சாதனை ரகசியம்","ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர் ஆத்மஞான ரகசியம்","அருள் மொழிகள்","வேதாந்த ரகஸ்யம்","ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச வைபவம்," ஞானாம்ருத மென்னும் பிரஹ்மானந்த சம்பாஷணை", "சச்சிதானந்த சிவம்," "பகவத்கீதா சங்கிலகம்," "சங்கர விஜயம்", "ராமானுஜ விஜயம்","சிவாஜி நாடகம்", "தேசிங்குராஜன் நாடகம்"," நளின சுந்தரி (அ) நாகரிகத்தின் தடபுடல்" போன்ற படைப்புகளை படைத்துள்ளார்.

சுதந்திரப் போராட்ட காலங்களில் சிவாவின் பரப்புரை பிரசித்தி பெற்றவை. ஆஜானுபாகுவான உடற்கட்டுடன் இருந்த சுப்ரமணிய சிவா மேடைகளில் தமது எழுச்சியுரையால் மக்களைக் கிளர்ந்தெழச் செய்வார். எனவே இவருக்கு 'சிவம் பேசினால் சவமும் எழும்' எனும் புகழ் மாலை சூட்டப்பட்டது.

இந்தியச் சுதந்திரப் போரில் இடையறாது ஈடுபட்டுச் சிறையேகி தொழுநோயாளியாகி மரணத்தைத் தழுவிய சுப்ரமணிய சிவாவின் தியாகம் அழியாப் புகழ் பெற்றது.

- **பெரணமல்லூர் சேகரன்**

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் கொரோனா தடுப்பூசி முகாம்

## கோவை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக 26.06.2021 அன்று கோவை ஐடிஐயில் கொரோனா தடுப்பூசி முகாம் மாவட்டத் தலைவர் பால்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

தடுப்பூசி முகாமை துவக்கி வைத்து தடுப்பூசியின் அவசியம் குறித்து கோவை ஐடிஐ துணை இயக்குநர் செல்வராஜ் பேசினார். திருப்பூர் ஐடிஐ முதல்வர் அன்பழகன், அரசு ஊழியர் சங்க இணைச் செயலாளர் பிரகலதா, கோவை வடக்கு வட்ட தலைவர் ஆர்.ராமசாமி, கோவை வடக்கு வட்ட செயலாளர் ஆர்.ரவி, கிளைத் தலைவர் கிருஷ்ணகுமார், பயிற்சி அலுவலர் பி.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பொருளாளர் பி.நடராஜன் நன்றி கூறினார்.

இம்முகாமில் அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு 620 தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட நிகழ்ச்சியானது சிறப்பாக நடைபெற்றது.

தடுப்பூசி வழங்க ஆவன செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், துணை இயக்குனர், பொது சுகாதாரத் துறை அவர்களுக்கும், உதவி இயக்குனர், பொது சுகாதாரத் துறை அவர்களுக்கும், தடுப்பூசிகளை பெறுவதற்கு உதவி செய்திட்ட கோவை பாராளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன், கோவை அரசினர் ஐடிஐயில் இம்முகாம் நடத்த அனுமதித்து இம்முகாமை சிறப்பாக நடத்திக் கொடுத்த கோவை மண்டல இணை இயக்குனர் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, துணை இயக்குனர் கோவை அரசினர் ஐடிஐ, தடுப்பூசிகளை செலுத்திய பிரகலதா (பொது சுகாதாரத்துறை) தலைமையிலான அணிக்கும், கோவை மாவட்ட, வட்ட அரசு ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகளுக்கும் உறுப்பினர்களுக்கும், அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட, வட்ட நிர்வாகிகளுக்கும் மற்றும் கோவை அரசினர் ஐடிஐயின் அனைத்து ஊழியர்களுக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கோவை மாவட்ட அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

## கரூர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக நடைபெற்ற தடுப்பூசி போடும் முகாம் ஜூன் மாதம் 18, 24 மற்றும் 25.06.2021 ஆகிய மூன்று நாட்கள் கரூரில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியும், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலை பட்டதாரி ஆசிரியர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்த கொரோனா தடுப்பூசி முகாமில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் அவர்களது குடும்பத்தார் என 820 பேர் பயனடைந்தனர்.

## மதுரை

18.6.2021 அன்று காலை 9 மணி முதல் கொரானா தடுப்பூசி முகாம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டடம், போஸ்ட் ஆபிஸ் தெரு, உசிலம்பட்டியில் நடைபெற்றது.

இம்முகாமில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்து கழக ஊழியர்கள், மின்கழக ஊழியர்கள், ஓய்வூதியர்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர்.

மேற்கண்ட நிகழ்வுகளில் பொதுமக்கள் பங்கேற்று தடுப்பூசி செலுத்திக் கொண்டனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் "மக்களை நோக்கிய பயணம்" நிகழ்ச்சியை பொதுமக்கள் மனதார பாராட்டினர். ■

**கோவிட்-19 நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க முகக்கவசம் அணிவோம்!**

# வீட்டு வசதித்துறை அமைச்சருடன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் சந்திப்பு

ஈரோடு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் முத்துச்சாமி அவர்களை சந்தித்தோம். சந்திப்பில் ஈரோடு மாவட்டத்தில் கொரோனா நோய்தொற்றுக்கு எதிராக அவர் மேற்கொண்டு வரும் போர்கால அடிப்படையிலான நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மேலும் கடந்த ஆட்சியில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கோரிக்கைகளுக்காக மேற்கொண்ட 9 நாட்கள் தொடர் மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டம் மற்றும் பிப்ரவரி 19இல் சென்னையில் நடைபெற்ற சட்டமன்ற கோட்டை நோக்கிய முற்றுகை போராட்டம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. மேலும் புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்த வேண்டியதின் அவசியம் பற்றி கருத்து பரிமாறினோம். ஈரோடு மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்றுக்கு எதிராக முன்களப் பணியாளர்களாக போராடிக் கொண்டிருக்கும் கடுமையான பணிச்சுமையில் இருக்கும் அரசு மருத்துவமனை,மருத்துவ கல்லூரி மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் செவிலியர்களுக்கு, நெருக்கடியை குறைக்கும் வகையில் தற்காலிக அடிப்படையில் நியமனங்கள், மற்றும் தொற்று குறைந்த மாவட்டங்களில் இருந்து மருத்துவ பணியாளர்களை மாற்றுப் பணியில் நியமிப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தோம். இச்சந்திப்பில் மாநில துணைத் தலைவர் மு.சீனிவாசன், மாவட்டச் செயலாளர் ச.விஜயமனோகரன், மாவட்ட இணைச் செயலாளர்கள் திருமுருகன், பழனிச்சாமி, ஈரோடு வட்டக்கிளை இணைச் செயலாளர் யூனுஸ், ஆகியோர் பங்கு பெற்றனர்.

# நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கரூர் மாவட்ட மையத்தின் சார்பில் கொரோனாவினால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு 13.06.2021 அன்று நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் மு.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் கெ. சக்திவேல் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநிலச் செயலாளரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவருமான எம்.எஸ்.அன்பழகன், தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ரமேஷ், பொருளாளர் சண்முகம், தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் சாந்தி, மாவட்ட பொருளாளர் கலா, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கரூர் 1 வட்ட தலைவர் அறிவழகன், கரூர் 2வட்ட கிளை செயலாளர் செல்வன், வட்ட கிளை 2 தலைவர் லட்சுமணன், மாவட்ட கிளை இணைச் செயலாளர் எல.பாலசுப்பிரமணி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கி சிறப்பித்தனர். மாவட்ட பொருளாளர் பொன்.ஜெயராம் நன்றி உரையாற்றினார். மொத்தம் 25 குடும்பங்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற பொருளுதவி மற்றும் நிதி உதவி செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட மையத்தின் சார்பில் மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றிகளையும் உரித்தாக்கிக் கொள்கிறோம்.

**FINANCE [Salaries] DEPARTMENT**

**G.O.Ms.No.160, Dated 29th June 2021.**

(Pilava, Aani-15, Thiruvalluvar Aandu-2052)

**ABSTRACT**

**MEDICAL AID** – New Health Insurance Scheme, 2021 – Provision of Health Care Assistance to the Employees of Government Departments, State Public Sector Undertakings, Statutory Boards, Local Bodies, State Government Universities etc., and their eligible family members through the United India Insurance Company Limited, Chennai - Implementation - Orders – Issued.

**READ:**

1. G.O.Ms.No.202, Finance (Salaries) Department, dated: 30-062016.
2. G.O.Ms.No.279, Finance (Salaries) Department, dated: 24-06-2020.
3. G.O.Ms.No.57, Finance (Salaries) Department, dated: 26-02-2021.

–oOo–

**ORDER:**

In the Government Order first read above, orders were issued for implementation of New Health Insurance Scheme, 2016 to provide health care assistance on a CASHLESS basis for employees of Government departments etc., and their eligible family members with a provision to avail assistance upto the limit of Rs.4.00 lakh and in respect of specified illness the enhanced limit was upto Rs.7.50 lakh for a block period of 4 years from 01-07-2016 to 30-06-2020 for the accredited treatments/surgeries in the hospitals approved by the United India Insurance Company Limited.

2. In the Government Order second read above, orders were issued to extend the New Health Insurance Scheme, 2016 for employees of the Government departments etc., and their eligible family members beyond 30-06-2020, for a period of another one year from 01-07-2020 to 30-06-2021, with assistance capped at Rs.4.00 lakh for families of all insured employees and at Rs.7.50 lakh for specified illnesses, as per existing terms and conditions of agreement made with the United India Insurance Company Limited.

3. The Government has examined the need for continuation of New Health Insurance Scheme for the Employees of Government Departments, State Public Sector Undertakings, Statutory Boards, Local Bodies, State Government Universities etc., and their eligible family members and decided to continue the same after selection of a suitable Public Sector Health Insurance Company through National Competitive Bidding as in the case of New Health Insurance Scheme, 2016. Accordingly, in the Government Order third read above, orders have been issued for the implementation of the New Health Insurance Scheme, 2021.

4. Based on the Government orders issued in reference third read above, the Notice Inviting Tender, dated 26-02-2021 has been issued. The Tender Scrutinizing Committee, i.e. the Principal Secretary to

Government [Expenditure], Finance (Salaries) Department, the Commissioner of Treasuries and Accounts and the Director of Medical and Rural Health Services, after following due procedure as per the Tamil Nadu Transparency in Tenders Act, 1998 and the Tamil Nadu Transparency in Tenders Rules, 2000, submitted its report on 18-06-2021 to select the United India Insurance Company Limited, Chennai for implementing the New Health Insurance Scheme, 2021 for the Employees of Government Departments, State Public Sector Undertakings, Statutory Boards, Local Bodies, State Government Universities etc., and their eligible family members.

5. The recommendation of the Tender Scrutinising Committee has been considered and the tender has been awarded to the United India Insurance Company Limited, Chennai. The said Company shall execute an agreement with the Government of Tamil Nadu for the implementation of the New Health Insurance Scheme, 2021.

6. The Government after careful consideration directs that:-

(1) “New Health Insurance Scheme, 2021 for Employees of Government Departments, State Public Sector Undertakings, Statutory Boards, Local Bodies, State Government Universities etc., and their eligible family members be implemented through the United India Insurance Company Limited, Chennai as set out in “The Guidelines for implementation of the New Health Insurance Scheme, 2021 for Employees of Government Departments, State Public Sector Undertakings, Statutory Boards, Local Bodies, State Government Universities etc., and their eligible family members appended to this order in Annexure -A;

(2) The Commissioner of Treasuries and Accounts shall be the administrator of the New Health Insurance Scheme, 2021;

(3)The enrolment under New Health Insurance Scheme, 2021 shall be compulsory, which is a separate scheme for all the employees irrespective of the fact that their spouse is a Central Government Employee covered under Central Government Health Insurance Scheme (CGHS) as detailed in para 3 of Annexure-A to this order;

(4) The employees of Government Departments, State Public Sector Undertakings, Statutory Boards, Local Bodies, State Government Universities etc., and their eligible family members covered under the scheme shall avail assistance upto the limit of Rupees Five Lakh in a block of four years commencing from 01-07-2021 to 30-06-2025 as a CASHLESS model for the approved treatments / surgeries listed in the Annexure-I to this order, in the hospitals approved by the United India Insurance Company / Third Party Administrator and listed in the Annexure-II to this order;

(a) However, the assistance shall be upto Rupees Ten Lakh for Specified illnesses listed out in Annexure I-A to this order;

(b) The upper limit of medical assistance for cataract surgery shall be Rs.30,000/- per eye. In respect of Hysterectomy (uterus removal surgery) the upper limit of medical assistance shall be Rs.50,000/-.

(c) The overall limit of assistance, in any case shall not exceed Rupees Ten Lakh for a family in a block of four years under this scheme.

(d) The medical treatment taken by the employees of Government Departments, Local Bodies, State Public Sector Undertakings, Statutory Boards and State Government Universities etc., and their eligible family members in Non-Network hospital under Non-Emergency situation shall also be covered on reimbursement basis. However, since the quality of treatment and facilities provided in a Non-network Hospital is not known and the employee is consciously choosing to avail treatment in such hospital, the

quantum of reimbursement in such cases shall be restricted to 75% of the package rate of similar procedure in the lowest grade Network hospital.

(e) This scheme covers 203 approved treatments and surgeries with 1,169 empanelled hospitals.

(f) The scheme is also extended to the parents of the employee, in case of unmarried employee until the employee gets married, in case of a divorced employee not having children until such employee gets re-married.

(g) The payment of annual premium shall be regulated as per the terms and conditions of the agreement between the Government of Tamil Nadu and the United India Insurance Company Limited, Chennai;

(5) The annual premium payable by the Government to the United India Insurance Company, Chennai shall be at the rate of Rs.3,240/- [plus Goods and Services Tax as applicable from time to time] per Employee, per annum for the block period of four years from 01-07-2021 to 30-06-2025;

(6) A sum of Rs.5/- per month shall be contributed separately by all the employees along with the monthly Health Insurance premium for creating a Corpus Fund (non-lapsable), with annual accrual of about Rs.5.60 crore for meeting higher expenses in respect of rare illness and exceptional circumstances, extending the total benefit upto Rs.20.00 lakh. These cases shall be decided by the High Level Committee already formed in G.O.Ms.No.202, Finance (Salaries) Department, dated 30-06-2016.

(7) The annual premium initially paid by the Government shall be recovered from the employee at the rate of Rs.300/- per month [Rs.295/- **Subscription for NHIS + Rs.5/- contribution for corpus fund**] by deduction in monthly salary from the month of July, 2021.

(8) Eventhough the legal spouse is covered under the term ‘Employee’, the total assistance to the Family will be limited to Rupees Five Lakh only in respect of diseases covered in **Annexure-I** and Rupees Ten Lakh only per family for specified illnesses listed in **Annexure-IA**. The overall limit of assistance shall not exceed Rupees Ten Lakh only per family in a block of four years.

(9) In case both the employee and spouse are State Government employees, the employee’s contribution shall be recovered from only one of the employees i.e. from the younger of the two.

(10) The employees appointed on (a) Consolidated Pay / Fixed Pay / Honorarium, (b) Daily Wage, (c) Contract basis, (d) Re-employment, (e) Temporary basis under Rule 10 (a) (i) of the Tamil Nadu State and Subordinate Services through Employment Exchange and (f) Outsourcing are not covered under this Scheme.

7. The Government also direct that the monthly subscription of Rs.**295/**- towards New Health Insurance Scheme, 2021 for the Employees of Government Departments shall be credited to the following Revenue Receipt Heads of Account:

8. The Chief Executive Officers / Managing Directors of State Public Sector Undertakings and Statutory Boards, Registrars of State Government Universities, the Director of Rural Development, the Director of Municipal Administration and the Commissioner of Hindu Religious and Charitable 5 Endowment Administration shall make necessary arrangements for recovery of the employee contribution at Rs.**295/**- per month by deduction in the monthly salary from July, 2021 and remittance of Annual Premium (including Goods and Service Tax as applicable from time to time) to the following heads of account.

9. The employees of State Government Organisations / Institutions registered under the Tamil Nadu Registration of Societies Act, 1975 which are willing and capable of bearing the GST applicable on the

contribution of the employees to the Insurance scheme without financial liability befalling on the State Budget may also be enrolled under the New Health Insurance Scheme, 2021.

10. The insurance premium on behalf of all the employees will be paid by the Government as per the terms and conditions of the agreement based on the proposals from the Commissioner of Treasuries and Accounts. The expenditure on payment of insurance premium shall be debited to the following Head of Account under Demand No.16. Finance Department [HoD Code 16-02]:

11. The Government direct that the monthly contribution of Rs.**5**/- made by all the employees including State Public Sector Units etc., towards creation of Corpus Fund (Non-lapsable) for meeting higher expenses in respect of rare illness and exceptional circumstances shall be credited to the following Deposit Head of Account:

12. All State Government departments/ Heads of Departments, Chief Executive Officers / Managing Directors of State Public Sector Undertakings and Statutory Boards, Registrars of State Government Universities, the Director of Rural Development, the Commissioner of Municipal Administration, the Commissioner of Hindu Religious and Charitable Endowment Administration and willing State Government Organisations / Institutions registered under Tamil Nadu Registration of Societies Act, 1975 shall make necessary arrangements for recovery of the employee contribution for corpus fund at Rs.**5**/- per month by deduction in the monthly salary from July, 2021 and remit to head of account indicated in **para-11** above.

The Commissioner of Treasuries and Accounts, Chennai-35 shall be the Estimating, Reconciling and Controlling Authority for the above said new Head of Account.

The Commissioner of Treasuries and Accounts, Chennai -35 is directed to open the above new Head of Account in their books.

13. The Nodal Officers of the United India Insurance Company Limited situated in the District Headquarters and Toll Free Helpline Number is listed in the **Annexure-V**. The lists of approved treatments and surgeries, approved hospitals and the addresses of the Offices situated in the District Headquarters will be hosted in the websites of Government of Tamil Nadu in Finance Department (www.tn.gov.in), Treasuries and Accounts Department (www.tn.gov.in/karuvoolam) and the United India Insurance Company Limited, Chennai / Third Party Administrator (www.mdindiaonline.com). The additional list of approved hospitals treatments /surgeries to be included and the list of deleted hospitals, treatments /surgeries if any covered in this Scheme will also be updated and hosted in the above websites for ready reference from time to time, based on the recommendation of the Accreditation Committee.

14. The Drawing and Disbursing Officers in Government Departments / Pay Drawing Officers in the other Organisations shall furnish the details of the employees and their eligible family members as per the Guidelines to this order.

15. The Commissioner of Treasuries and Accounts shall submit proposals to Government for sanction of insurance premium at the appropriate time as per the terms and conditions of the agreement.

16. The modalities on the operation of corpus fund will be issued separately.

(BY ORDER OF THE GOVERNOR)

**S.KRISHNAN**
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

# புதிய நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் 2021 (NHIS) திருத்திய அரசாணை வெளியிடக் கோரி முதல்வருக்கு அளித்திட்ட முறையீடு

பெறுநர்

1. மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்கள்
 தலைமைச் செயலகம், சென்னை-600009
2. மாண்புமிகு **நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர்** அவர்கள்
 தலைமைச் செயலகம், சென்னை-600009
3. மாண்புமிகு **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்** அவர்கள்
 தலைமைச் செயலகம், சென்னை-600009
4. **தலைமைச் செயலாளர்** அவர்கள்
 தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம், சென்னை-600009
5. **கூடுதல் தலைமைச் செயலாளர்** அவர்கள்
 நிதித்துறை, தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம், சென்னை-600009

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் - புதிய நல்வாழ்வுக் காப்பீட்டு திட்டம் 2021(NHIS) அரசாணை வெளியிட்டு பிரிமியத்தொகை மாத பிடித்தம் ரூ.300/- உயர்த்தி அரசு பங்களிப்பு உறுதி செய்தல் - மருத்துவக் காப்பீட்டு உயர்த்துதல் மற்றும் சில நோய்கள் சேர்ப்பதும் - திருத்திய அரசாணை வெளியிடக் கோருதல் - தொடர்பாக

பார்வை : 1. அரசு ஆணை எண்.202/நிதித்துறை, நாள்.30.06.2016
2. அரசு ஆணை எண்.279/ நிதித்துறை, நாள்.24.06.2020
3. அரசு ஆணை எண்.57/நிதித்துறை, நாள்.26.02.2021
4. அரசு ஆணை எண்.160/நிதித்துறை, நாள்.29.06.2021

*****

வணக்கம்.

பார்வையில் காணும் அரசு ஆணைகளின் விவரங்களை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 2008ல் துவங்கப்பட்டு அப்போது ஒரு ஊழியருக்கு ரூ.20 வீதம் மாத சம்பளத்தில் பிடித்தம் செய்து, அரசு சார்பில் பங்களிப்பு செய்தும் 4 ஆண்டுகளில் இரண்டு லட்சம் காப்பீடு வழங்கப்பட்டது.

அதன்பின்பு வந்த அ.இ.அ.தி.மு.க. அரசு 2012-2016ல் புதிய மருத்துவக் காப்பீட்டு திட்டம் என்ற பெயரில் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் ஒவ்வொரு ஊழியருக்கும் ரூ.150/-வீதம் ஊதியத்தில் பிடித்தம் செய்து, தமிழக அரசு சார்பில் சேவை வரி பங்களிப்பும் செய்து ரூ.4 லட்சத்திற்கு மருத்துவக் காப்பீடு வழங்கப்பட்டு வந்தது.

அதனைத் தொடர்ந்து 2016-2020ல் கடந்த அ.இ.அ.தி.மு.க. அரசு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என்ற பெயரில் அரசு ஆணை 202/நிதித்துறை, நாள்.30.06.2016ன்படி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் மாதம் ரூ.180/- என உயர்த்தி, தமிழக அரசு பங்களிப்பு ஏதுமின்றி அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் சிகிச்சை பெறும் தொகை ஏற்கனவே இருந்த ரூ.4 லட்சத்திற்கான மருத்துவக் காப்பீடு மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு ரூ.7.1/2 லட்சம் என உச்சவரம்பு நிர்ணயித்தது.

தற்பொழுது பார்வை 4ல் காணும் அரசு ஆணை எண்.160/நிதித்துறை, நாள்.29.06.2021ன்படி ஒரு அரசு ஊழியருக்கு ரூ.300/- (295+5 =300) மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும், சிகிச்சைக்கான காப்பீடு ரூ.4 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாக உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேபோல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு ரூ.7.1/2 லட்சத்திலிருந்து 10 லட்சமாக உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த 10 ஆண்டுகால அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினால் பல்வேறு

இன்னல்களுக்கு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆளாக்கப்பட்டு, பல்வேறு குறைபாடுகளை களைய வலியுறுத்தி பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தியுள்ளோம். அவ்வாறு நடத்தியும், இத்திட்டத்தில் குறைகள் களையப்படாமல் இருந்து வந்துள்ளது.

ஆனால் தற்பொழுது தங்கள் தலைமையில் மிக அறுதி பெரும்பான்மையுடன் பொறுப்பேற்றுள்ள தி.மு.க. அரசு, அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத்திட்டம் உள்ளிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். இந்த அரசு ஆணை அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்காக தமிழக அரசு, ஊழியர்களுக்கு எவ்வித தொகையையும் பங்களிப்பு செய்யவில்லை, அது மட்டுமல்ல எங்களின் நீண்டநாள் கோரிக்கை மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்ற எங்கள் கோரிக்கை ஏற்கப்படாததும் மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

எனவே தமிழக அரசு பிறப்பித்த அரசு ஆணையில் கீழ்க்கண்ட விவரங்களை கூடுதலாக சேர்க்கப்பட்டு திருத்திய அரசாணை வெளியிட வேண்டுமென கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

1. மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் ரூ.300/- மாதம் பிடித்தம் செய்யப்படுவதால் 4 ஆண்டுக்கான காப்பீடு ரூ.8 லட்சமாக உயர்த்திட வேண்டும்.

2. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு ரூ.7.1/2 லட்சம் என்பதை 15 லட்சமாக உயர்த்த வேண்டும். அறுவை சிகிச்சையின்போது இரத்தக்கொடை கொடுப்பவருக்கு ஆகும் பரிசோதனை உள்ளிட்ட மருத்துவச் செலவுகளை காப்பீட்டு நிறுவனமே ஏற்கவேண்டும்.

3. குடும்பத்தில் கணவன்/ மனைவி/ குழந்தைகள் (25 வயதுவரை) இத்திட்டத்தில் பயன்பெற முடியும் என்ற முறை மாற்றி, திருமணம் ஆகும் வரை என்றும், தன்னை சார்ந்த பெற்றோர்கள், தத்து குழந்தை, விதவை,விவாகரத்து பெற்ற ஆண்/பெண் ஆகியோர் இத்திட்டத்தில் கொண்டுவர வேண்டும்.

4. மருத்துவ சிகிச்சையின்போது ஏற்படும் மருத்துவச் செலவுகள் முழுவதையும் காப்பீட்டு நிறுவனம் வழங்க வேண்டும். package முறையை முற்றிலும் ரத்து செய்திட வேண்டும்.

5. கட்டணமில்லா சிகிச்சை (Cashless Treatment) என்பதை உறுதிப்படுத்திட வேண்டும்.

6. தற்பொழுது உள்ள NIHSல் உள்நோயாளி சிகிச்சை மட்டும் அனுமதியளிக்கப்பட்டு உள்ளது. வெளிநோயாளி சிகிச்சை மற்றும் ஓராண்டு கண்காணிப்பு சிகிச்சை அனுமதிக்கப்பட வேண்டும்.

7. தற்பொழுது உள்ள இத்திட்டத்தில் அரசு ஊழியர், ஆசிரியர் விருப்பக் கடிதம் கேட்கப்பட வேண்டும்.

8. இத்திட்டத்தில் 203 வகையான அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை முறை மற்றும் 1169 மருத்துவமனைகள் சிகிச்சையில் சேர்க்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். ஆனால் இன்னும் சில நோய்களுக்கான சிகிச்சை முறை சேர்க்கப்பட வேண்டும். (உ.ம்: குடல் ஒட்டு அறுவை சிகிச்சை, காரணமில்லா ரத்தப்போக்கு, கருப்புபூஞ்சை, மலேரியா)

9. காப்பீட்டுத் திட்டம் தொடர்பாக மாவட்ட அளவில் அரசு ஊழியர், ஆசிரியர், மருத்துவமனை நிர்வாகிகளை இணைத்து மூன்று மாதத்திற்கொரு முறை குறை தீர்க்கும் கூட்டம் நடத்திட வேண்டும்.

10. தவிர்க்க முடியாத காரணத்தால், காப்பீடு பெற இயலாத நோயாளிகள், மீள மருத்துவக் காப்பீட்டை பெற கால அவகாசம் 30 நாளிலிருந்து 90 நாட்களாக உயர்த்திட வேண்டும்.

11. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கொரோனா காலத்தில் சிகிச்சை அளிக்க மறுக்கும் மருத்துவமனைகள் மீதும், அதேபோல் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்பொழுது முன்பணம் கட்ட வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் மருத்துவமனைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எனவே தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்களை கடைகோடி மக்களுக்கு கொண்டு சேர்க்க, இந்த கொடிய பெருந்தொற்று காலத்தில் உயிரை துச்சமென மதித்து களப்பணியாற்றும் அரசு ஊழியர், ஆசிரியர்களின் கடந்த அ.இ.அ.தி.மு.க. அரசு பறிக்கப்பட்ட / மறுக்கப்பட்ட கோரிக்கைகள் தி.மு.க. அரசு நிறைவேற்றும் என்றும் இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினை கட்டணமில்லா சிகிச்சை என்பதை உறுதிப்படுத்திடவும், தமிழகத்தில் உள்ள 12 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் நலனை கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எங்களது நியாயமான கோரிக்கைகளை, எதிர்பார்ப்புகளை நிறைவேற்றித்தர வேண்டுமாய் கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(மு. அன்பரசு)
மாநிலத் தலைவர்

(ஆ. செல்வம்)
பொதுச்செயலாளர்

# எதுவரினும் இடர்படாமல் உறுதியோடு எதிர்கொள்வோமா?

மை டியர் காம்ரேட்ஸ்,

இந்த உலகில் நடந்துள்ள பெரிய பெரிய கண்டுபிடிப்புகள், ஏற்பட்டுள்ள சமூக மாற்றங்கள், நிகழ்த்தப்பட்டுள்ள சாதனைகள் இவற்றையெல்லாம் நடத்திக் காட்டியவர்கள் பெரிய பெரிய மனிதர்களாக இருந்தவர்கள் என்று யாராவது சொன்னால் நம்பிவிடாதீர்கள். அந்த கண்டுபிடிப்புகளை, மாற்றங்களை, சாதனைகளை செய்து முடித்த பின்னர் வேண்டுமானால் அவர்கள் பெரிய பெரிய மனிதர்களாக ஆகியிருக்கலாம். ஆனால் இத்தகைய சாதனைகளை, மாற்றங்களைச் சாதிப்பதற்கு முன்பு அவர்கள் சாதாரண மனிதர்களாக, வறுமையிலும் ஏழ்மையும் உழன்றவர்களாக, உடல்குறைபாடுகள் உள்ளவர்களாகக் கூட இருந்திருக்கிறார்கள். ஆனால் இந்த சாதனையாளர்களிடம் ஒரு பழக்கம் மட்டும் இருந்தது அது மன உறுதி. இந்த உலகம் வெற்றி பெற்றவர்களை மட்டும்தான் பார்க்கிறது. இந்த வெற்றியை அந்த வெற்றியாளர்கள் பெறுவதற்கு முன்னால் எத்தனை தோல்விகளை அடைந்திருக்கிறார்கள். எவ்வளவு அவமானங்களை சந்தித்திருக்கிறார்கள் என்று யாரும் கவனிப்பதில்லை. நாமனைவரும் வரலாற்றை படித்தால் எல்லா வெற்றிக்கதைகளும் பெரிய தோல்விகளின் கதைகளால் எழுப்பப்பட்டவை என்பதை புரிந்துகொள்ளலாம்.

நான் இப்போது ஆபிரகாம் லிங்கன் என்று ஒரு பெயரைச் சொல்கிறேன். நமக்கெல்லாம் அவரை அமெரிக்காவின் ஜனாதிபதியாக மட்டும் தான் தெரியும் ஆனால் அவர் அமெரிக்க ஜனாதிபதி ஆவதற்கு முன்பு சந்தித்த தோல்விகளின் பட்டியல் பெரியதாகும். தனது 21ஆவது வயதில் வியாபாரத்தில் தோல்வி. 22ஆவது வயதில் சட்டமன்றத் தேர்தலில் தோல்வி. 26ஆவது வயதில் காதலில் தோல்வி. 27ஆவது வயதில் நரம்புத்தளர்ச்சியால் பாதிப்பு. 34ஆவது வயதில் சட்டமன்றத்தேர்தலில் தோல்வி. 45ஆவது வயதில் ஆட்சிக்குழுத் தேர்தலில் தோல்வி. 47ஆவது வயதில் துணை ஜனாதிபதி பதவியை அடைய முயற்சித்துத் தோல்வி. 49ஆவது வயதில் மீண்டும் ஆட்சிக்குழுத் தேர்தலில் தோல்வி என நீண்டு தனது 52ஆவது வயதில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார்.

அட்லாண்டிக் கடலுக்கு அப்பாலும் மனிதக் குரலை ஒலிபரப்ப முடியும் என்று சொல்லி தனது கம்பெனியின் பங்குகளை வாங்கிக்கொள்ளும்படி விளம்பரம் செய்த லீடி்ஃபாரஸ்ட் மாவட்ட வழக்குரைஞரால் குற்றம் சாட்டப்பட்டு மக்களை தவறான வழியில் தூண்டுவதாக அவமதிக்கப்பட்டார். ஆனாலும் அவர் தன்னுடைய முயற்சியை கைவிடாமல் வெற்றிபெற்றார். காற்றைவிட கணமாகப் பறக்கும் இயந்திரம் ஒன்றை கண்டுபிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்த ரைட் சகோதரர்களின் அறிவு நுட்பத்தைச் சந்தேகித்து நியுயார்க் டைம்ஸ் தனது பத்திரிகையில் செய்தி வெளியிட்டு கேலி செய்திருந்தது. பத்திரிகையின் கேலியை பொருட்படுத்தாமல் அடுத்த வாரத்திலேயே தங்களது முதல் பறக்கும் சோதனையை வெற்றிகரமாக நடத்திக் காட்டினர் ரைட் சகோதரர்கள். இளம் கேலிச்சித்திரக்காரரான வால்ட் டிஸ்னி திறமையில்லாதவர் என்று பல செய்தித்தாள் ஆசிரியர்கள் புறக்கணித்தனர். பின்னாளில் அவர்தான் கம்ப்யூட்டர் இயந்திரத்திற்கு மவுஸைக் கண்டுபிடித்தார். தாமல் ஆல்வா எடிசன் லைட் பல்பை கண்டுபிடிக்க செய்த முயற்சியில் 10000 தடவைகளுக்கு மேல் தோல்வியடைந்திருக்கிறார். இளம் பீத்தோவனிடம் இசைத்திறமை கொஞ்சம்கூட இல்லை என்று சொல்லப்பட்டது. ஆனால் அவர்தான் பின்னாளில் இவ்வுலகிற்கு சில அரிய இசையைத் தந்தார்.

வாழ்வில் பின்னடைவுகள் தவிர்க்க முடியாதவை. ஒரு பின்னடைவே நமக்கு

உந்துசக்தியாகச் செயல்பட்டு பணிவைக் கற்றுக்கொடுக்கலாம். உறுதியோடு முயற்சி செய்தால் அந்தப் பின்னடைவிலிருந்து வெளிவருவதற்கான தைரியத்தையும், நம்பிக்கையையும் நாம் அந்தப் பின்னடைவிலிருந்து கண்டுபிடிக்கலாம். கொண்ட லட்சியத்திலிருந்து பின் வாங்கிவிடாமல் உறுதியோடு அதனோடு ஒன்றிவிட வேண்டும் என்பதுதான் வெற்றிபெற்ற மனிதர்களின் பார்முலாவாக இருக்கிறது. மைக்கேல் ஆல்சலோ தான் வரையும் படத்தின் கீழேயே படுத்துத் தூங்குவாராம். எழுந்தவுடன் மீண்டும் சித்திரம் வரைய ஆரம்பித்துவிடுவாராம். நெப்போலியன் தன் குதிரை மீது சவாரி செய்து கொண்டே சில நிமிடங்கள் மட்டும் படுத்துத் தூங்குவாராம். பின்னர் புத்துணர்ச்சியுடன் எழுந்து அடுத்த பணியை துவக்கிவிடுவாராம்.

ரோசா பார்க்ஸ் என்றொரு சாதாரண பெண்மணி இருந்தார். காலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். ரோபோ மாதிரி இயந்திர வாழ்க்கைத்தான் அவருடையது. எதையோ உண்பார். இருக்கிற உடையை உடுத்திக்கொள்வார் பையைத் தூக்கிக்கொண்டு காலை 5.30 மணிக்கெல்லாம் பேருந்து நிலையம் வந்துவிடுவார். பேருந்தில் ஏறி நின்றுகொண்டே பயணம் செய்து அலுவலக




பேருந்து நிறுத்தத்தில் இறங்கி அலுவலகத்திற்குள் ஓடி காலை 6.00 மணிக்கெல்லாம் வேலைக்காரர்கள் வரிசையில் நின்று தனக்கென கொடுக்கப்படும் வேலையை செய்யத் தொடங்கி விடுவார். இரவு அலுவலக மணி ஒலிக்கும் வரை கொடுத்த வேலைகளை ஒன்று மாற்றி ஒன்று ஓய்வின்றி செய்துகொண்டே இருப்பார். பிறகு அலுவலகத்திலிருந்து நடந்து பேருந்து பிடித்துக்கொண்டு தூங்கி வழிந்து கொண்டே பேருந்தில் இடமிருந்தாலும் நின்றவாறே பயணித்து வீட்டுக்குப் போய் பொத்தென்று படுக்கையில் சுருண்டு கொள்வார்.

1955ம் ஆண்டு டிசம்பர் 1ம் தேதி ரோசா பார்க்ஸ் வழக்கம்போல் வேலைக்குக் கிளம்பினாள். அன்று அவருக்கு உடல் அசதியாக இருந்தது. சுறுசுறுப்பாக இயங்க முடியவில்லை. இருந்தாலும் வேலைக்கு போயாக வேண்டுமே என்ற நெருக்கடி அவரை அலுவலகம் செல்ல வைத்தது. வழக்கம்போல் அலுவலகத்தின் இயந்திரத்தனமான வேலைகளில் உழன்று அலுவலக மணி அடிக்கும் வரையில் உடல் உபாதையை பொறுத்துக் கொண்டு வேலை செய்தார். நடக்க முடியாமல் நடந்து வந்து பேருந்து ஏறினார். பேருந்தில் கூட்டம் அதிகமில்லை. எப்போதும் நின்று கொண்டு பயணிக்கும் அவருக்கு உடல்சோர்வு காரணமாக கொஞ்சம் உட்கார்ந்து கொண்டு பயணித்தால் தேவலை என்று தோன்றிது. பேருந்தின் பின்புற வரிசையைப் பார்த்தாள் அங்கே சில இருக்கைகள் காலியாக இருந்தன. கடைசி வரிசையில் இருந்த இருக்கை 'வா உனக்காகத்தான் காத்திருக்கிறேன்' என்று சொல்வது போலிருந்தது. போய் அமர்ந்து கொண்டாள். அவள் முதுகும் கால்களும் கைகளும் அவளுக்கு வாய்விட்டு நன்றி சொல்வது போலிருந்தது. சோர்வில் இருக்கையிலேயே தூங்க ஆரம்பித்து விட்டாள்.

'எழுந்திரு' என்று ஒரு குரல் கேட்டது. ஆனால் அவளால் இமைகளை திறக்க முடியவில்லை. யாரோ யாரையோ சொல்கிறார்கள் என்று உறக்கத்தைத் தொடர்ந்தாள். மீண்டும் அதே குரல் 'எழுந்திரு' என்று அதட்டலாகக் கூற அவள் உடம்பில் முள் குத்தியது போன்று இருந்தது. கத்தியது பேருந்தின் ஓட்டுனர் என்பதையும் அவர் கத்தியது அவள் அந்த இருக்கையில் உட்கார்ந்துவிட்டதற்காக என்றும் உணர அவளுக்கு சில விநாடிகள் பிடித்தன. அதற்குள் மீண்டும் பேருந்து ஓட்டுநர் 'உன்னைத்தான் சொல்கிறேன் எழுந்திரு' என்று அடிக்காத குறையாக கத்த அவர் முகத்தைப் பார்த்தாள். அவர் முகத்தில் கடுகடுப்பும்,

எரிச்சலும், கோபமும் கலந்திருந்ததைப் பார்த்தாள் அவள். பேருந்துக்குள் அமர்ந்திருந்த மற்ற நபர்கள் முணுமுணுப்பதும் அவளுக்குக் கேட்டது. இப்போது அவளுக்குப் புரிந்தது, 'எத்தனை மணி நேரப் பயணமாக இருந்தாலும் வெள்ளையர் இருக்கை கண் முன்னால் காலியாகவே இருந்தாலும் ஒரு கறுப்பர் நிற்கத்தான் வேண்டும். ஆனால் ஒரே ஒரு வெள்ளையர் ஒரு நிமிடம் கூட நிற்கக்கூடாது. ஆயிரம் கறுப்பர்களை ஆயிரம் முறை நீங்கள் அவமானப் படுத்தலாம். ஆயிரம் பார்வைகளால், ஆயிரம் சைகைகளால் ஆயிரம் முறை ஒவ்வொரு கறுப்பு உடலையும் உள்ளத்தையும் அவர்கள் தாக்கி காயப்படுத்தலாம். நாங்கள் எல்லோரும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் பழகிக் கொள்ள வேண்டும். எழுந்திரு என்று சொன்னவுடன் எழுந்து நின்றுவிட வேண்டும்.' என்று தனக்குள் நினைத்துக் கொண்டவர் எழுந்திருக்காமலேயே உட்கார்ந்திருந்தார். ஓட்டுநர் அவர் அருகில் வந்து 'நீ எழுந்திருக்காவிட்டால் கைது செய்யப்படுவாய்' என்று கத்தினார். எழுந்தால்தான் என்னவாம் என்று பேருந்தில் அமர்ந்திருந்த சக வெள்ளையர்கள் கேட்டார்கள். முழு உலகமும் ஒரே குரலில் கத்துவது போல் தோன்றியது அவருக்கு. 'எழுந்திரு ரோசா, இவர்களோடு நாம் மோதி ஜெயிக்கமுடியாது. நமக்கேன் வம்பு எழுந்து வந்துவிடேன்' என்றார்கள் பேருந்தில் நின்றுகொண்டிருந்த ரோசாவின்மீது அக்கறை கொண்ட கறுப்பினப் பெண்கள்.

அவர்களைப் பார்த்து ரோசா பார்க்ஸ் சொன்னார், 'அவர்களோடு மோதுவதற்கு வேறுயார் வருவார்கள்? நமக்காகப் பேசுவதற்கு இங்கு யார் இருக்கிறார்கள்? நாம் ஏன் அந்தக் குரலுக்குக் கட்டுப்பட்டுக்கொண்டே இருக்கிறோம்? நாம் ஏன் ரோபோக்கள் போல அந்தக்குரல் சொல்வதற்கெல்லாம் கட்டுப்பட்டு அந்தக்குரல் சொல்வதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம்?' அன்று அவர் கைது செய்யப்பட்டார். அந்தக் கைதை எதிர்த்து நாடு முழுவதும் எதிர்ப்புகள் கிளம்பின. 'எழுந்திரு' என்று சொன்ன அந்த ஒரு குரலுக்கு எதிராக 'எழுந்திருக்க மாட்டோம்' என்று பலகுரல்கள் சேர்ந்து ஒலித்தன. 'நகர்ந்து போ' என்று சொன்ன வெள்ளைக்குரலை எதிர்த்து 'நகர மாட்டோம்' என்றன கறுப்புக் குரல்கள். 'ஒதுங்கு' என்ற குரலுக்கு எதிராக 'ஒதுங்கமாட்டோம்' என்ற குரல்கள் ஒலித்தன. அதன்பின் எல்லாமே மாறத் தொடங்கின. வெள்ளையின மக்களுக்கு இணையான உரிமைகள் கறுப்பின மக்களுக்கும் கிடைக்க வழிகோலிய இந்த நிகழ்வு வரலாற்று நிகழ்வானது. அதுவரை ரோசா பார்க்ஸ் ஒன்றும் பெரிய ஆள் இல்லை சாதாரண மனுஷிதான் ஆனால் அதன்பிறகு அவர் வரலாற்று நாயகியானார். அவலுக்குள்ளிருந்த உறுதி மகத்தானது. ஒரு தலைவனோ தலைவியோ எப்படி உருவாகிறார்கள் என்பதற்கு ரோசாவின் மனவலிமை ஒரு சான்று. இந்த நிகழ்விற்குப் பிறகு 'என்ன மாயம் செய்தாய் ரோசா?' என்று வியப்போடு கேட்டவர்களிடம் அவர் சொன்ன வார்த்தைகள் மிகவும் முக்கியமானவை.

''நான் என்ன செய்தேன் என்பது முக்கியமல்ல. என்ன செய்யவில்லை என்பதுதான் முக்கியம். நான் கடைசிவரை எழுந்திருக்கவில்லை.''

காம்ரேட்ஸ் உரிமை பறிப்பு என்று வரும்போது அதை மீட்க நாம் அதிகாரம் படைத்தவர்களாகவோ, பெரிய ஆளாகவோ இருக்க வேண்டியதில்லை உறுதி மிக்கவர்களாக விடாமுயற்சியோடு போராடக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் வெற்றி பெற்றவர்கள் அனைவரும் நமக்கு விட்டு சென்றிருக்கும் டிப்ஸ். அந்த உறுதி மட்டும்தான் நம்மை நமக்கான உரிமைகளையும் சமூக மாற்றத்தையும் கொண்டு வந்து சேர்க்கும்.

- ஜிஜி

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com